பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 19 வெள்ளிக்கிழமை (04-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:219

# ஜனாதிபதியின் அதிகாரச் சிறகை வெட்டாமல் சேர்ந்து பறவுங்கள்!

## அரசைக் கோருகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு,ஜூலை4

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை வெட்டுவதற்குப் பதிலாக அரசு, அவருடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருக்கிறார். அதிகாரங்களை வெட்டுவதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ அல்லது அரசின் மறைந்திருக்கும் நோக்கங்களை நிறைவேற்றவோ முடியாது எனவும் அவர் கூறியிருக்கிறார்.**

ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்றுப் பாதுகாப்பு அதிகாரங்களில் ஒரு பகுதியை அரசு பொறுப்பேற்க அதிஉயர் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருப்பது தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இக்கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

நேற்று விடுத்த ஓர் அறிக்கை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரம் ஆயுதக் களஞ்சியம் நேற்று திடீரென வெடித்துச் சிதறியது

### தீ விபத்துக் காரணமாம்

கொழும்பு,ஜூலை4

அனுராதபுரம் சாலியபுர படைமுகாம் ஆயுதக் களஞ்சியத்தில் நேற்று திடீரென பாரிய வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் கஜபாகு படைப்பிரிவு ஆயுதக் களஞ்சியத்திலேயே நேற்று மாலை 5மணிக்கு திடீரென தீ பரவியதால் இந்த வெடி விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இந்தக் களஞ்சியத்தில் கிளைமோர், ஆர்.பீ.ஜி. குண்டுகள் மற்றும் கைக்குண்டுகள் என்பன சேமித்து வைக்கப்பட்டிருந்ததாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

திடீரென ஏற்பட்ட தீ விபத்தினாலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டதாகவும் இதனால், ஆயுதக் களஞ்சியம் முற்றாக தீப்பற்றியுள்ளதாகவும் இந்த விபத்தால் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி படைத்தரப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. (ம-5,6)



கனேடியத் தூதர் வலரி ரேமனை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

## இடைக்கால வரைபு கிடைத்த பின்பே பாலா – தமிழ்ச்செல்வன் சந்திப்பு

### லண்டனிலேயே நடக்கும்

கிளிநொச்சி,ஜூலை4

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புத் தொடர்பான அரசின் வரைபு கிடைத்த பின்னரே விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் சென்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் கலந்துரையாடுவார் என புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள நோர்வே சமாதானக்குழுவின் விசேட ஆலோசகரும் இலங்கைக்கான முன்னாள் தூதருமான ஜோன் வெஸ்பேர்க் அரசின் புதிய வரைபுடன் அடுத்த வார நடுப்பகுதியில் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார்.

அந்த வரைபு தொடர்பாக மதியுரைஞர் பாலசிங்கத்துடன் கலந்துரை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பேச்சை ஆரம்பிக்கும் பொறுப்பு அரசிடமே உள்ளது

### கனேடியத் தூதருக்கு தமிழ்ச்செல்வன் விளக்கம்

கிளிநொச்சி,ஜூலை4

"இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் பொறுப்பு அரசின் பக்கமே உள்ளது. இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசு அதனை நடைமுறைப் படுத்தலாம்."

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த கனேடியத் தூதுவர் வலரி ரேமன் அம்மையாரிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக

## இம்முறை அனுப்பும் பரிந்துரைகளினை புலிகள் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள்!

### அரசு நம்பிக்கை

கொழும்பு,ஜூலை4

விடுதலைப் புலிகளின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்படவிருக்கும் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை பரிந்துரைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்குமென அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்று செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

இதனைக் கருத்தில் கொண்டு புலிகளின் நிராகரிப்புக்கு உட்படாதவாறு இடைக்கால நிர்வாக சபை குறித்த பரிந்துரை அமைய வேண்டுமென்பதில் அரசாங்கம் கவனமெடுத்து வருவதாக அந்த ஏஜென்சித் தகவல் மேலும் தெரிவித்தது.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முதலில் அனுப்பிவைத்த திட்டங்களை புலிகள் ஏற்கனவே நிராகரித்திருந்தனர். இந்த நிலையில் தமது பரிந்துரை இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட வேண்டும் என்பதிலும் அரசாங்கம் கவனமெடுத்து வருகிறது. இது தொடர்பில் சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசனின் முழுமையான ஆலோசனையையும் அரசாங்கம் பெற்றிருக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் புதூர் அரசியல் பொறுப்பாளர்

## சத்தியராஜின் விளக்கமறியல் காலம் மேலும் இரண்டு வாரங்களால் நீடிப்பு

கொழும்பு,ஜூலை4

விடுதலைப் புலிகளின் புதூர் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சத்தியராஜின் விளக்கமறியல் காலம் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ராசிக் குழு உறுப்பினர் கதிர்காமத்தம்பி நவசூரியன் என்பவரின் கொலை தொடர்பாகவே சத்தியராஜ் (ஜீவராஜா சுபாஸ்கரன்) கைதானார்.

நேற்று அவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது மட்டக்களப்பு பொலீஸார் சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலித்த மாவட்ட நீதிபதி அப்துல் கபூர், சத்தியராஜின் விளக்கமறியல் காலத்தை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடித்து உத்தரவிட்டார்.

இதற்கிடையில், சத்தியராஜின் பிணை மனு இன்று திருகோணமலை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சத்தியராஜை விடுதலை செய்யுமாறு கோரி, ஏறாவூரில் கடமையாற்றிய இரண்டு பொலீஸ் கான்ஸ்டபிள்களை விடுதலைப் புலிகள் தடுத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கல்லடி முகாம் விஸ்தரிப்புக் குறித்து

## கூட்டமைப்பு எம்.பிக்கள் – புலிகள் கொக்கட்டிச்சோலையில் சந்திப்பு

கொழும்பு,ஜூலை4

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களும விடுதலைப் புலிகளின் தலைவர்களும் கடந்த புதன் இரவு சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர். இச்சந்திப்பு கொக்கட்டிச்சோலையில் நடைபெற்றது.

இன்றைய அரசியல் நிலை, பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தி, கல்லடி முகாம் விஸ்தரிப்பு ஆகியவை இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)



# கரும்புலிகள் தினம் நாளை
# உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

## ஐந்து கோட்டங்களிலும் ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை4

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய 240 கரும்புலிகளின் நினைவாக நாளை உணர்வுபூர்வமாக கரும்புலிகள் தினம் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குடாநாட்டின் ஐந்து கோட்டங்களிலும் விசேட கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்நல்லூர் கோட்டத்தில் நாச்சிமார்கோவில் மைதானத்திலும் -

வலிகாமம் கோட்டத்தில் மானிப்பாய் செல்லமுத்து மைதானத்திலும் -

தீவகக் கோட்டத்தில் வேலணை துறையூரிலும் -

நெடுந்தீவுக் கோட்டத்திலும் - விசேட கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள கப்டன் மில்லரின் நினைவுத்தூபியில் பிரதான விசேட நிகழ்வுகள் காலையும் மாலையும் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிமுதல் மில்லரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். தேசியக்கொடி ஏற்றப்பட்டு, அகவணக்கம் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் இருந்து கரும்புலி மாவீரர்களின் உருவப்படங்கள் 'பாண்ட்' இசை முழங்க ஊர்வலமாக மகாவித்தியாலய மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு பெரும் கூட்டம் இடம்பெறும்.

கரும்புலிகள் தினத்தை உணர்வுபூர்வமாகக் கொண்டாட பொது அமைப்புக்கள் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

வன்னியிலும் வடக்கு-கிழக்கில் ஏனைய பகுதிகளிலும் கரும்புலிகள் தினத்தை உணர்வுபூர்வமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

கரும்புலிகள் தினத்தையொட்டி கப்டன் மில்லரின் திருவுருவப் படம் தாங்கிய சுவரொட்டிகள் குடாநாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன.

மஞ்சள், சிவப்புக்கொடிகளாலும் பதாகைகளாலும் குடாநாடு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

(ம-3-8-29-74-86-173-70)

## யாழ்.நகரில் இப்படியும் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை4

'சமாதானத்தை எதிர்ப்பவர்களின பேச்சை நம்பி பாடசாலை மாணவர்களை நாசகாரச் செயல்களில் ஈடுபடுத்துவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்' என குறிப்பிட்டு யாழ்.நகரில் பல இ[illegible]களிலும் வர்ணச்சுவரொட்டிகள் ஒ[illegible]பட்டுள்ளன.

"அ[illegible] பெற்றோர்களே! ஆசிரியர்களே!" [illegible] தலைப்பிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ள இவ்வர்ணச்சுவரொட்டியில், பாடசாலை மாணவர்கள் பதாகைகளுடன் இராணுவ முகாம் ஒன்றிற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது போன்ற படமும் வரையப்பட்டுள்ளது.

உங்கள் பிள்ளைகள் கல்வி அறிவுடையவர்களாக வளரவேண்டுமானால சமாதானத்தை குழப்புபவர்களிடம் இருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுவரொட்டிகளில் அதிக எழுத்துப்பிழைகளும் காணப்படுகின்றன. (ம-8)

## விநாயகபுரத்தில் ஐஸ் தொழிற்சாலை

திருக்கோவில்,ஜூலை4

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மீனவர்களின் நலன் கருதி விநாயகபுரத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பதினைந்து இலட்சம் ரூபா நிதியுதவி மூலம் ஐஸ் தொழிற்சாலை விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தெரிவித்தார்.

தொழிற்சாலை அமைக்கப்படுவதால் இப்பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளும், மீனவர்கள் தமது வருமானத்தைப் பெருக்கும் வழிகளும் ஏற்படுமென்றும் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் மீனவர் தங்குமிடமொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் அரசியல் கைதிகள் 10 பேர் நீதிமன்றால் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை4

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 15 வழக்குகளை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுள்ளதை அடுத்து அவ்வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட 10 பேர் யாழ். மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத தடுப்புச் சட்டத்தின கீழ் தொடரப்பட்ட 15 வழக்குகள் யாழ் மேல்நீதிமன்றத்தால் கடந்த மாதத்தில் விசாரிக்கப்பட்டு வந்தன.

இந்த வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சமயம், அரச சட்டவாதியான செல்வி சுகந்தி கந்தசாமி, சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் பிரஸ்தாப வழக்குகளை வாபஸ்பெறுவதாகத தெரிவித்தார்.

இதையடுத்து அந்த வழக்குகளில குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜாவால் விடுவிக்கப்பட்டனர்.

பாலசுப்பிரமணியம் விமலேஸ்வரன், முருகேசு வேலு, மகேஸ்வரன் குகதாஸ், இளையதம்பி புஸ்பாகரன், கதிரமலை சிறீதரன், சின்னத்தம்பி சிவகுமார், மனோகரராசா சதீசன், இராமசாமி நவநீதன், தங்கராசா ரதீபன், சற்குணராசா இராஜகுமார் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். (ம-3)

# புத்தளத்தில் ஐ.தே.க ஆதரவாளர்கள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம்

## ந.ச.தலைவர் பதவி மு.காவுக்கு வழங்கப்பட எதிர்ப்பு

புத்தளம்,ஜூலை4

"புத்தளம் நகர சபையின் தலைவர் பதவியை ஐக்கிய தேசியக் கட்சிக்கே வழங்க வேண்டும்!" என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று புத்தளம் பஸ் நிலையத்திற்கு எதிரே ஐதேகட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார்கள்.

ஐதேக ஆதரவாளர்களான ஆண்களும், பெண்களும் பெரும் எண்ணிக்கையில் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

"ஐ.தே.கட்சிக்கு வாக்குப் போட்டோம்; தலைமைப் பதவி வேறு யாருக்கோ....!", "புத்தளம் நகரசபையில் மீண்டும் காடையர்களின் ஆதிக்கமா?", "நாட்டின் தலைவர் ரவூப்பா....? நீங்களா பிரதமரே" - என்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

புத்தளம் நகரசபையின் புதிய நிரந்தரத் தலைவராக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க அரசு முடிவு செய்திருப்பதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் மிகக்கூடுதலானோர் பெரும்பான்மை இனத்தவர்களாவர். ஐ.தே.கவைச் சேர்ந்த குவிண்டன் ஜோசப். சபையின் பதில் தலைவராகக் கடமையாற்றி வருகிறார். (ம)

# நாடு முழுவதிலும் வேலைநிறுத்தத்துக்கு வைத்தியசாலை ஊழியர்கள் தயார்

## உண்ணாவிரதமும் தொடருகிறது

கொழும்பு,ஜூலை4

தங்களின் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்காவிடின் நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளின் கனிஷ்ட ஊழியர்கள் இன்று நண்பகல்முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென்று அகில இலங்கை சுகாதாரச் சேவை சங்கம் கூறுகிறது.

இச்சங்கத்தைச் சேர்ந்த கனிஷ்ட ஊழியர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் வேறு சில வைத்தியசாலைகளிலும் வேலைநிறுத்தம் மேற்கொண்டுவருகின்றனர். சுகாதார அமைச்சுக்கு எதிரே அவர்கள் உண்ணாவிரதமும் மேற்கொண்டிருககின்றனர்.

இந்த ஊழியர்களின் வேலைநிறுததம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

தங்களின் கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இராணுவம் சேவையில் ஈடுபடுமென அரசு கூறிய போதிலும் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லையெனவும் அவர்கள் கூறினர்.

# வீதியில் நிரையாக சைக்கிளில் சென்றவருக்கு ரூ.1000 தண்டம்

தென்மராட்சி,ஜூலை4

வீதியில் சைக்கிளில் நிரையாக - சமாந்தரமாக - சென்ற ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

வீதிப் போக்குவரத்து விதிகளுக்குப் புறம்பாக சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்றவர்களில் ஒருவரைக் கைது செய்த கொடிகாமம் பொலீஸார் அவரை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சிதம்பரன் சிறிவிஷ்ணுகுமார் என்ற அந்த நபரை விசாரணை செய்த நீதிவான் அவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

தண்டத் தொகையை செலுத்தத் தவறினால் ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்ட நீதிவான் குறிப்பிட்ட நபருக்கு கடுமையாக எச்சரிக்கையும் விடுத்தார். (ம-117)

# சு.க. - ஜே.வி.பி. ஒப்பந்தம் குறித்து ஏனைய கூட்டுக் கட்சிகளுடனும் பேச்சு

## அதன் பின்னரே கைச்சாத்து என்கிறார் செயலாளர்

கொழும்பு,ஜூலை4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஏனைய கட்சிகளுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தவுடன் கைச்சாத்திடப்படும்.

சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில், ஸ்ரீல.சு.க.- ஜே.வி.பி. கூட்டமைப்புக்கான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுவிட்டது. இரு தரப்பினரும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். தலைவர், செயலாளர் நியமனங்கள் தொடர்பாகவும் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன், ஜே.வி.பியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஓரிரு தினங்களில் பேச்சு நடத்தவுள்ளோம் - என்று தெரிவித்தார். (ம-5-6)

# வாக்காளர்களின் எண்ணிக்கை 2,25,444 ஆல் அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை4

இவ்வாண்டு வாக்காளர் அட்டவணைப்படி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 2,25,444 ஆல் அதிகரித்திருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

2001 ஆம் ஆண்டு வாக்காளர் அட்டவணைப்படி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 1,26,73,688 ஆகும். 2002 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 1,28,99,132 ஆக அதிகரித்திருக்கின்றது.

இதனால், எதிர்வரும் பொதுத்தேர்தலில் சில மாவட்டங்களில் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படும் என்றும் தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

## புதிய செயலாளர் நியமனம்

கொழும்பு,ஜூலை4

பொது நிர்வாக, மறுசீரமைப்பு அமைச்சின் புதிய செயலாளராக எஸ்.சி.மானப்பெருமவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். இம்மாதம் முதலாம் திகதிமுதல் இந்நியமனம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதற்கு முன்னர் இவர் கடற்றொழில், நீரியல் வள அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றினார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புதிய மூன்று அதிகாரிகள் நியமனம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு மூன்று விசாரணைக்குழு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக யாழ் அலுவலகத்திற்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக விரிவான விசாரணைகளையும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காகவே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பீ.சந்திரசேகர தெரிவித்தார். இதேவேளை -

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட மூன்று வெளிநாட்டவர்களில் ஒருவரான இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ்ரி என்ற பெண் ஆலோசகர் நேற்றுகடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-8)

## கோட்டக்கல்வி அதிகாரி நியமனம்

யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளராக யாழ்.சென்ஜேம்ஸ் ஆண்கள் மகா வித்தியாலய அதிபர் எஸ்.எஸ்.தங்கராஜா மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இப்பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. (எ-30-51)

# சகல பாடசாலைகளையும் மீள வகைப்படுத்த நடவடிக்கை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஜூலை4

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் மீள வகைப்படுத்தி தரம் பிரிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடசாலைகளில் உள்ள அடிப்படைத் தேவைகள், போக்குவரத்து வசதி, ஆளணி வளம், ஆசிரிய, மாணவ விடுதி வசதிகள், பாடசாலையில் புதிதாக இணையும் மாணவர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் திரட்டப்பட்டு அவற்றுக்கு அமைவாக ஏ,பி,சி,டி என நான்கு வகைகளாக பாடசாலைகள் தரம் பிரிக்கப்படும்.

இவற்றில் 'டி' தரத்துப் பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகக் கணிக்கப்படும். இந்த வகைப்படுத்தல்களின் அடிப்படையிலேயே வரும்காலத்தில் ஆசிரியர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் என்பன அமைந்திருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் சகல ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் சேவையாற்றியிருக்க வேண்டியது அவசியமாகும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய தரம் பிரிப்பின் மூலம் தற்போதுள்ள தர ஒழுங்குகள் மாற்றமடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4-88)

# புதிய ஜனநாயகக் கட்சியின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா

## வாசுதேவவும் பங்கேற்பார்

கொழும்புத்துறை,ஜூலை4

புதிய ஜனநாயக கட்சியின் 25 ஆவது நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்கென லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் வாசுதேவ நாணயக்கார யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

மேற்படி ஆண்டுவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் யாழ்பல நோ.கூ.சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் கலந்து கொள்ளவே வாசுதேவ நாணயக்கார யாழ்.வருகை தரவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

மூத்த தோழர்கள் கௌரவிப்பு. கவியரங்கு, மலையகம், கொழும்பு மற்றும் யாழ்.பாடகர்கள் இணைந்து வழங்கும் இசைப்பாடல்கள், வீதி நாடகம் என்பன விழாவின் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறும்.

வாசுதேவ உட்பட பேர்ஸி சமரவீர, கா.செந்திவேல், வசந்த திஸநாயக்க உட்பட மற்றும் பலர் சிறப்புரை நிகழ்த்துவர். (எ-30-12)

'நாஜி' சிப்பாயுடன் ஜேர்மனியரை ஒப்பிட்ட

# இத்தாலியப் பிரதமரின் மன்னிப்பை வலியுறுத்துகிறார் ஜேர்மன் அதிபர்

லண்டன்,ஜுலை4

ஜேர்மனிய அரசியல்வாதியை கிட்லரின் நாஜிப்படை வீரருடன் ஒப்பிட்ட இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லூஸ் கோனி பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும் என்று ஜேர்மன் அதிபர் ஜெராட் ஸ்க்ரோடர் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஜேர்மனியப் பிரதிநிதி மாட்டின் ஸ்குல்ஜ் என்பவர் இத்தாலியப் பிரதமரை கடுமையாக விமர்சித்திருந்தார். அடுத்து உரையாற்றிய இத்தாலியப் பிரதமர் பெர்லூஸ் கோனி நாஜிப்படை சிப்பாயுடன் ஸ்குல்ஜை ஒப்பிட்டுப்பேசினார். 'நாஜிக்கள் யூதர்களை இனப்படுகொலை செய்த முகாம்களைப் பற்றி இத்தாலியில் ஒருவர் திரைப்படம் எடுக்கின்றார். அதில் நாஜிக்




இத்தாலியப்பிரதமரும் (இடது) ஜேர்மனிய அதிபரும் (வலது)

களின் சித்திரவதை முகாமில் பணியாற்றும் பாதுகாவலர் வேடத்தை உமக்குப் பெற்றுத்தருகின்றேன்' என்று ஸ்குல்ஜை நோக்கி இத்தாலியப் பிரதமர் கூறியிருந்தார்.

இந்தச்சம்பவம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்தி மிக்க இருநாடுகளிடையேயும் அசாதாரண இராஜதந்திர நிலைமையை உருவாக்கியுள்ளது.

இதேவேளை- ஸ்குல்ஜின் விமர்சனம் குறித்து இத்தாலிக்கான ஜேர்மனியத் தூதுவரிடம் இத்தாலிய அரசும் இத்தாலியப் பிரதமரின் கருத்து குறித்து ஜேர்மனுக்கான இத்தாலியத் தூதுவரிடம் ஜேர்மன் அரசும் தத்தமது அதிருப்திகளை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் பகிரங்க மன்னிப்புக்கேட்க இத்தாலிய அதிபர் மறுத்துவிட்டால் எழும் சூழ்நிலையை சமாளிப்பது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவசரமாக கூடி விவாதிக்கின்றனர். (ஒ)



தாய்வானில் தைபே நகரில் கட்டப்பட்டு வருகிறது இந்த 101 மாடிக் கட்டடம். கட்டி முடிக்கப்பட்ட பின் இதன் உயரம் 1667 அடியாக இருக்கும். அதன்பின், இதுதான் உலகிலேயே மிக உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெறும்.

## யூதரை இழிவுபடுத்தியதற்காக பி.பி.ஸியை இஸ்ரே ் புறக்கணிப்பு

ஜெருசலேம்,ஜுலை4

யூதர்களை இழிவுபடுத்தும் வகையில் சித்திரித்த பி.பி.ஸி.வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளைப் புறக்கணிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

இதற்கான முடிவை இஸ்ரேலிய அரசின் பத்திரிகைத்தொடர்பு அதிகாரி டேனியல் சீமேன் அறிவித்தார். இஸ்ரேலை இழிவுபடுத்தும் வகையில், எல்லைப்பகுதியில் அரேபியர்களுக்கு எதிரான நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபட்டதாக சித்திரித்து செய்தி ஒளிபரப்பிய காரணத்துக்காகவே பி.பி.ஸி. தொலைக்காட்சி மற்றும் வானொலியை புறக்கணிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

மறு அறிவிப்பு வரும் வரை இஸரேலிய அதிகாரிகளோ, அமைச்சர்களோ அல்லது அரசு தொடர்புடைய பேச்சாளர்களோ பி.பி.ஸிக்கு பேட்டியளிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

## காஸா வீதி மூடப்பட்டது

காஸாவில் வடக்குத் தெற்காகச் செல்லும் நெடுஞ்சாலை பலஸ்தீனர்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யும் வகையில் நேற்று இஸ்ரேலியரால் மூடப்பட்டது.

யூதக்குடியிருப்பு ஒன்றின் மீது டாங்கி எதிர்ப்பு ஏவுகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததை அடுத்து இந்த வீதித்தடை போடப்பட்டுள்ளது. யூதக்குடியேற்றத்தில் விழுந்து வெடித்த ஏவுகணையால் மூன்று இஸ்ரேலியர்கள் காயமடைந்தனர்.

இரண்டரை ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த இந்தவீதி கடந்த நான்கு தினங்களுக்கு முன்பு போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டது. தற்போது மீண்டும் வீதியின் குறுக்கே கொங்கிறீற் கற்களைக்கொண்டு இஸ்ரேல தடைவிதித்துள்ளது.

யுத்த நிறுத்தத்திற்கு உடன்படாத அல் அக்ஷா மாவீரர் படையணியைச்சேர்ந்த உறுப்பினர்களே இந்தத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

# ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் தமிழகத்தில் ஒரே நாளில் பணிநீக்கம்?

சென்னை,ஜுலை4

தமிழகத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களும், ஆசிரியர்களும் பணிநீக்கப்படுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அரச ஊழியர்களும் ஆசிரியர்களும் நேற்றுமுன் தினம்முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால், தலைமைச்செயலகம் உட்பட அரச அலுவலகங்கள் செயலிழந்துள்ளன.

தங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கக்கோரியே இப்போராட்டம் நடைபெறுகின்றது.

இதேவேளை - வேலைநிறுத்தத்தை தூண்டி விட்ட தமிழக தலைமைச்செயலகப் பணியாளர்கள் அனைவரும் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

சென்னையில் உள்ள தமிழக அரசின் தலைமைச்செயலகத்தில் மொததமுள்ள 4861 ஊழியர்களில் 594 பேர் மட்டுமே வேலைக்கு வந்தனர். எனவே எஞ்சிய அனைவர் மீதும் அரசின் நடவடிக்கை இருக்கும் என்று தெரிகிறது.

மாவட்டங்களில் இதேபோல் வேலைநிறுத்தத்தை தூண்டும் அரசுபணியாளர்கள், ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

தலைமைச்செயலகம் மற்றும் மாவட்டங்களில் பணிநீக்கம் செய்யப்படுவதால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வேலை வாய்ப்பகங்கள் மூலம் தகுதியான நபர்களின் பட்டியலைப்பெற்று இன்று வெள்ளிக்கிழமைமுதல் புதிய ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.



சென்னை தொழிலாளர் நல வாரிய ஊழியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

# அமெரிக்கப் படையினர் 7 பேர் ஈராக்கில் காயம்!

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர்.

பக்தாத்திலிருந்து 100 கி.மீ. தூரத்தில் உள்ள ரமாடி என்ற நகரில் இச்சம்பவம் நடந்துள்ளது என்று அமெரிக்க கட்டளைப் பீடம் தெரிவித்துள்ளது.

பக்தாத்தின் மத்திய பகுதியில் நடந்த மற்றொரு தாக்குதலில் அமெரிக்கப் படையினர் ஒருவர் காயமடைந்தார்.

தாக்குதலுக்கு இலக்கான அமெரிக்கப் படையினர் பயணித்த ஜீப் ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகியது. இத்தாக்குதலை அடுத்து அப்பகுதியை அமெரிக்கப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.



தாக்குதலுக்குள்ளான அமெரிக்கப் படையினரின் வாகனம்

## அமெரிக்கா மீது புனிதப் போர் ஈராக் நகரவாசிகள் சபதம்

பக்தாத்,ஜுலை4

அமெரிக்க படையினருக்கு எதிராக புனிதப்போர் தொடுப்பது என்று ஈராக்கின் பலூஜா நகரவாசிகள் சபதம் எடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பலூஜா நகரில் உள்ள மசூதி ஒன்றினுள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவேளை ஒன்பது பேர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகவே அவர்கள் இந்த சபதத்தை எடுத்துள்ளனர்.

மசூதி மீது அமெரிக்க விமானம் நடத்திய தாக்குதலிலேயே ஒன்பது பேரும் கொல்லப்பட்டனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இதனை அமெரிக்கப் படையினர் முற்றாக மறுத்துள்ளனர். மசூதியில் வெடிகுண்டு தயாரிப்பு பயிற்சிகள் நடைபெற்றதென்றும், அங்கிருந்த குண்டு ஒன்று வெடித்ததன் காரணமாகவே ஒன்பது பேர் கொலலப்பட்டனர் என்றும் அமெரிக்க மத்திய கட்டளைப்பீடம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க மத்திய கட்டளைப்பீடம் கூறியுள்ள இந்தக் காரணத்தை மறுத்த ஈராக்கியர்கள், மசூதியில் ஏற்பட்ட அழிவுக்குப் படையினர் பொறுப்பல்லர் என்று நம்பவைக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கினாலும் தமது இறுதி மூச்சு இருக்கும் வரை புனிதப் போரை நடத்தப் போவதாக சபதம் பூண்டுள்ளனர்.

இந்நிலையில், ஈராக்கின் ஒரு பகுதியை பொறுப்பேற்குமாறு போலந்து படையினரை அமெரிக்கா கேட்டுள்ளது. ஈராக்கில் 1,46,000 அமெரிக்கப் படையினர் தற்போது உள்ளனர். அவர்களின் கட்டுப்பாட்டில்தான் பக்தாத்தும் ஏனைய சில நகரங்களும் உள்ளன. அங்குள்ள பிரிட்டிஷ் படையினரின் கட்டுப்பாட்டில்தான் பஸ்ரா நகரம் உள்ளது. தற்போது போலந்து படையினரிடம் ஒரு நகரத்திற்கான பொறுப்பை அமெரிக்கா ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை,

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ ஈராக்கிற்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார். கடந்த வாரம் ஆறு பிரிட்டிஷ் படையினர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அவர் அங்கு கேட்டறிவார் எனக் கூறப்படுகிறது.

# ஈழத்தமிழர்கள் பற்றிப் பேசுவது இந்தியாவை எப்படிப் பாதிக்கும்?

## நெடுமாறனின் சட்டத்தரணி நீதிமன்றில் வாதம்

சென்னை,ஜுலை4

ஈழத்தமிழ் சகோதரர்களைப் பற்றி பேசுவது இந்தியாவின் இறையாண்மையை எப்படிப்பாதிக்கும்?

தமிழகப் பொடா சிறப்பு நீதிமன்றத்தில் பழ.நெடுமாறனின் சட்டத்தரணி இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியமை மற்றும் கூட்டம் நடத்தியமை தொடர்பாக தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன், பொதுச்செயலர் சு.ப. வீரபாண்டியன், பேச்சாளர் பாவாணன், டாக்டர் தாயபன், தமிழ் முழக்கம் பதிப்பக உரிமையாளர் சாகுல்ஹமீது ஆகியோர் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தமிழர் தேசிய இயக்க நிர்வாகிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்சந்திரசேகரன் வாதிட்டதாவது :

தமிழர் தேசிய இயக்க நிர்வாகிகள் அரசியல் காரணங்களுக்காக வேண்டுமென்றே பொடா வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆட்சியாளர்களின் நிர்ப்பந்தம் காரணமாக பொலீஸார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

இலங்கையில் வாழும் சகோதரத் தமிழர்கள் அங்குள்ள ஆட்சியாளர்களால் பாதிக்கப்படுவது பற்றிப் பேசுவது இந்தியாவின் இறையாண்மையை எப்படிப் பாதிக்கும்? பொடா சட்டத்தில் எப்படிவரும். நமது நாடு ஜனநாயக நாடு என்பதை மறந்து விடக்கூடாது.

சென்னையில் ஆனந்த் தியேட்டரில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட கூட்டம் வெளிப்படையாக நடைபெற்றது. அதற்கு அனுமதி கோரி பொலீஸாரிடம் கடிதம் அளிக்கப்பட்டது. பொலீஸாரும் பாதுகாப்புப் போடடிருந்தனர் என்று வாதிட்டார். இந்த வழக்கு விசாரணை ஜுலை 16.ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ)

## லொறி கவிழ்ந்து விபத்து! ஆந்திராவில் 13பேர் பலி!

விஜயநகரம்,ஜுலை4

ஆந்திராவில் நேற்று சீமெந்து மூடைகளை ஏற்றிச் சென்ற லொறி கவிழ்ந்து விபத்தில் சிக்கியதில் 13 பேர் உயிரிழந்தனர். தூக்கக் கலக்கத்தில் சாரதி லொறியை ஓட்டிச் சென்றதால், அந்த லொறி தடுமாறிக் கவிழ்ந்தது.

இதில் லொறியில் இருந்த 13 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த அனைவரின் மீதும் சீமெந்து மூடைகள் விழுந்து கிடந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஏ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

6ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த சண்முகப்பிரியா சண்முகரெத்தினம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.816772656V) யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "வலம்புரி" புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (19767)

சின்னத்துரை நந்ததீபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.791442966V), விசேட அடையாள அட்டை என்பனவும் லைசன்ஸ்"ம யாழ். - கொடிகாமத்துக்கு மோட்டார் சைக்கிளில் செல்கையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோகிலா தேநீர்ச்சாலை, கொடிகாமத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (19800)

680/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சபாரத்தினம் சசிகுமார் என்பவருடைய மோட்டார் சைக்கிள் (NPGQ - 2369) ஆவணங்கள் (INSURANCE, TAX உட்பட) நல்லூர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (19810)

## விற்பனைக்கு

நல்ல நிலையில், தனிப்பாவனையில் உள்ள 107 தொடர் இலக்கமுடைய HONDA CD 125 TWIN கறுப்பு மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில காலை 7.00 - 9.00வரை. தொடர்பு:- S.K.ராஜா, இல.40, நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (19799)

சுத்தமான ஒரு வயது நிரம்பிய அல்சேஷன் இன நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு:- நகணேந்திரன் J.P. "மதுரா", கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. (19763)

முசந்தாஸ் (சிவப்பு வெள்ளை), றெசினா மஞ்சள் கொடிப்பூ, ஸ்பொஞ் பிளவர், பின் எக்ஸ்சோறா (வெள்ளை, மஞ்சள்) ஜெஹ்றோவா, ஈரப்பலா, Y.T.T., போகன்விலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்(U.N.D.Pஇற்கு அண்மையில்). (19643)

நல்ல நிலையிலுள்ள ஸ்கூட்டர், கார் (404) என்பன விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு நாள்களில் பார்வையிடலாம். தொடர்பு: சுவாமி சித்ரூபானந்தா, பருத்தித்துறை. (19762)

## வீடு விற்பனைக்கு

புரியங்கூடல், மாரியம்மன் கோயில் முன் ஒழுங்கை 1/2 கிலோ மீற்றர் தூரத்திலும் வேலணை மத்திய கல்லூரியிலிருந்து 3/4 கிலோ மீற்றர் தூரத்திலும் 10 பரப்புக் காணி கொண்ட கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 600 7833. (19708)

## மணமகள் தேவை

யாழ்.உயர் இந்து, இலங்கை அரசாங்கப் பொறியியலாளர் வயது - 33, சித்திரை 3, இடபலக்னம், உதயச செவ்வாய் - பாவப் புள்ளி மொத்தம் 441/2 உடையவருக்கு அழகிய வைத்திய கலாநிதி, பொறியியலாளர் மணமகள் தேவை. விளம்பர இலக்கம் 1940, உதயன், யாழ்ப்பாணம். (19787)

## யாத்திரிகர் மடத்துக்கு அடிக்கல் நடுகை

காரைநகர், ஜூலை4

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்து யாத்திரிகர் மடத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் புதன்கிழமை நடுகை செய்யப்பட்டது.

ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயத்திற்கு அருகில் இந்த மடம் அமையவிருக்கின்றது. இதற்கான அடிக்கல்லை ஈழத்துச் சிதம்பர ஆதீனகர்த்தாக்கள் நட்டு வைத்தனர்.

இதேவேளை-

காரைநகர் வலந்தலைப் பகுதியில் 10 மில்லியன் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் அறிவித்துள்ளார். (எ-73)


## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
### யாழ்., பேராதனை

**G.A.Q., B.A. Part I, B.A. final**

*புதிய விரிவுரைகள் ஆரம்பம்:* 05-07-2003

யாழ். நகரில் காலை 8.00 மணி. இணுவிலில் மாலை 4.00மணி

பல்கலைக்கழக பதிவுகள், நூலக வசதி செய்து தரப்படும்.

★ **நியூட்டன்** - ஆரியகுளம் சந்தி, யாழ்.நகர்.

★ **திகழ் கல்வி நிறுவனம்** - K.K.S.வீதி, இணுவில்.

(19797) (21-19-14-16)


உ

## காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில்
### ஈழத்துச் சிதம்பரம்
### வருடாந்த ஆனி உத்தர நடேசர் அபிஷேகம்

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனி 21ஆம் நாள் (06.07.2003) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3மணியளவில் அபிஷேகம் நடைபெற்று காலை 6மணிக்கு ஆனி உத்தர தரிசனம் நடைபெறும். மாலை 4மணிக்கு சிவகாமசுந்தரி சமேத நடராசப்பெருமான் திருவீதி உலாவருவார். 5ஆம் திகதி சனிக்கிழமை இரவு தேவார, திருவாசக முற்றோதல் நடைபெறும். அன்று மாலை 5.30-6.15இற்கும் யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து ஆலயத்திற்கும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் இருந்தும் போக்கு வரத்துச் சேவை நடைபெறும்.

ஆ. அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்,
(ஆதீன கர்த்தாக்கள்)

(சி-28711) (21-26-14-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
15
04
1926



உதிர்வு
04
06
2003

### அமரர் கபிரியேல் அருளப்பு

எங்கள் ஆருயிர்த் தந்தையே!
எம்மோடு ஒன்றாகி எம்மோடு உறவாடி
எமைவிட்டு இன்று நீ எங்கு சென்றாய்?
ஏங்கித் தவிக்கின்றோம் உன் பிரிவால்!

நல்ல கல்வி தந்தெம்மை
நலமுடனே வளர்த்ததனால்
நன்மை பல பெற்று இன்று
நல்ல நிலை அடைந்தோம், நன்றி ஐயா!

கண்டித்து ஏசினாலும் - அதில்
கனிவும் நிறையவுண்டு
நகைச்சுவைப் பேச்சுப் பேசி
நடித்தும் காட்டிடுவாய்!

வருத்தமென்று உறங்கவில்லை
வறுமையிலும் சோரவில்லை
எமையெல்லாம் வாழ்விக்க
என்னவெல்லாம் செய்தாய் ஐயா!

வளம் சேர்த்து நாமுன்னை
வாழ்விக்க எண்ணுகையில்
நீயின்றிப் போனாயே
நிரந்தியமாய் உறங்கினாயே!

நாடு விட்டு நாடு வந்து
நாமிங்கு வாழ்வதனால்
கடைசிவரை உன் முகத்தைக்
காணாது தவிக்கின்றோம்!

அதிகாலை மணி ஒலித்திடும்
ரெலிபோன் மணியோசையால்
திடுக்கிட்டு எழுந்தெடுத்தால்
ஐயா உன் குரல் ஒலித்திடுமே!

இனி எப்போது கேட்போம் உன்குரலை?
எங்கு பார்ப்போம் உன் முகத்தை?
திடீரென மறைந்தாயே - எமை
தவித்திட வைத்தாயே!

விசுவாச வாழ்வினில்
விழிப்புடன் இருந்ததனால்
வானக வாழ்வடைய
வான தூதன் வழி செய்வார்!

"உன் ஆன்மா சாந்திபெற உன்னதரை வேண்டுகின்றோம்"

உன் பிரிவால் துயருறும்
உன் அன்புப் பிள்ளைகள்
(பிரான்ஸ், லண்டன்)

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (19764)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு இதய அஞ்சலி

மண்மகிழ
1957
10
24



கண்நெகிழ
2002
07
15

### அமரர் நாகலிங்கம் கந்தசாமி

திதி: 04.07.2003

சீரோங்கு அரியாலையம் பதியில் அவதரித்து
அன்பாலும் பண்பாலும் நல்லுழைப்பாலும் உயர்ந்து
பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் குளவிளக்காய்
வாழ்ந்த அன்புத் தந்தையாய் மாலையிட்ட மனையாளும்
வாடிநிற்க வேரோங்கப் பெற்றெடுத்த பிள்ளைகளோடு
உடன்பிறந்த உன்சோதரரும் துயரத்தில் பரிதவிக்க
ஓராண்டு போனதென்னே! துயரமது
ஆறவில்லையே நெஞ்சம்தான் மறக்குமா நின்நினைவை?

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

*இல 56, முள்ளிவீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (19805)(21-14-16-25)

துயர்பகிரும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாளும் வந்ததுவோ? எம் தாயே!

அன்னை
மடியில
03
05
1936



இறைவன்
அடியில்
04
06
2003

திருமதி
### கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி

*அன்பு காட்டி நின்றாய் அம்மா*
*நான் இருக்கப் பயம் ஏன் என்றாய் அம்மா!*
*ஊரார் பசிபோக்கி நின்றாய் அம்மா!*
*எனது பிள்ளையின் பசி போய்விட்டது*
*– என்றீர் அம்மா!*
*பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம்*
*– தெரியுதம்மா!*
*ஆர்க்குமே தீங்கெண்ணா அன்புருவே எம்*
*– தாயே!*
*நாள் முழுதும் நடமாடிய எம் தெய்வமே*
*எந்நாளும் எம்மோடு வாழ்வீரென்றே*
*– எண்ணினோம் அம்மா!*
*கொடிய நோய் வந்ததுவோ அம்மா*
*கொண்டு போறேன் என்று ஓர் சொல்*
*– கூறினோனோ அம்மா!*
*நாம் படும் வேதனை உங்களுக்குத்*
*– தெரியவில்லையோ அம்மா!*
*அம்மாவை இழந்த அநாதைகளோ*
*நாங்கள் அம்மா.......?*

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எங்கள் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
தாய், கணவர், அன்புச் செல்வங்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
T.P.213365.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (19775)

# உதயன்

## சமாதான முயற்சிகளை அர்த்தமற்றதாக்கும் செயல்

"போர் நிறுத்தத்தைக் கண்காணித்து சமாதான சூழலைக் கட்டி வளர்க்கும் நோக்குடன் வந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவுக்கு படையினரின் யுத்தநிறுத்த மீறல்களைத் தடுக்கும் திராணி இல்லாமல் போய்விட்டது."

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இரண்டு தசாப்த கால இனப்போருக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - நிரந்தரத் தீர்வுகாணும் முயற்சிகள் கடந்த ஒன்றரை வருடகாலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈழத்தமிழருக்கு நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு காலங்காலமாக ஆட்சியில் இருந்து வந்த சிங்களப் பெரும்பான்மை அரசுகள் மறுத்து வந்ததால்தான் இனப்பிரச்சினை கொடூரப்போராக வெடித்தது என்பது வரலாறு.

இந்தப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டுமானால், இதுவரை காலமும் தமக்கிடையே பெரும் அவநம்பிக்கையையும் வெறுப்புணர்வையும் மட்டுமே வளர்த்து வந்த சிங்களவர் தரப்பும் தமிழர் தரப்பும் பரஸ்பரம் ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கை வைத்து ஒரு மேசையில் எதிர் எதிரே இருந்து பேசவேண்டும் என்பது கட்டாயமானதாக இருந்தது; களத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் பெருங் குரோதமாகக் கனன்று கொண்டிருந்த யுத்தத்தை நிறுத்தி, அமைதியைப் பேண வேண்டிய தேவையும் அவசியமானதாக அமைந்தது.

அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தும் நன்நோக்குடன் - 2001 டிசெம்பரில் - ரணிலின் புதிய அரசு ஆட்சியேற்றகையோடு - ஒரு தலைப்பட்சமாகப் புலிகள் யுத்தநிறுத்தம் அறிவித்தனர். ரணிலின் அரசும் பதில் நடவடிக்கை எடுத்தது.

அதன் விளைவாக, இருதரப்பு இணக்கத்துடனான யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்யும் விதத்தில் - அந்த யுத்த நிறுத்த ஏற்பாடுகளையும் உள்ளடக்கியதான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தமிழர் தரப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், அரசுத்தரப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுசரணையாளர்களான நோர்வேத தரப்பு ஊடாக ஒப்பந்தப் பத்திரங்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழேயே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டது.

களத்தில் இருதரப்புப் படைகளின் இடையே யுத்த நிறுத்தம் பேணப்படுவதை உறுதிசெய்வதே யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முக்கியபணி; இலக்கு; நோக்கம்.

களத்தில் உள்ள இருதரப்புப் படைகளில் ஒரு தரப்பு - புலிகளின் படை அவர்களின் காவல்துறை, இராணுவம், கடற்புலிகள் அமைப்பு என்பன அதில் அடக்கம்.

மறுதரப்பு - இலங்கை அரசினுடையது. அரசின் இராணுவம், கடற்படை, விமானப்படை, ஏனைய துணைப்படைகள், பொலீஸ் என்பன அவற்றில் அடங்குகின்றன.

இதில் புலிகளைப் பொறுத்தவரை சகல பாதுகாப்பு அமைப்புகளும் தலைவர் பிரபாகரனின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளன. அவரே புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச் சாத்திட்டுள்ளார். அவரே தமது படை அமைப்புகளை முழுக் கட்டுப்பாட்டில் வைத்து வழி நடத்துகின்றார்.

ஆனால், மற்றைய தரப்பான இலங்கை அரசுப் பக்கத்திலோ நிலைமை சிக்கல். அரசின் அதிகார மையம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருபுறமும் நாடாளுமன்றப் பெரும்பான்மை கொண்ட பிரதமர் ஒருபுறமுமாக இரண்டாகப் பிரிந்து நிற்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர் பிரதமர் ரணில். ஆனால், அவருக்கு அரசியலில் முழு எதிரியான ஜனாதிபதி குமாரதுங்க, முப்படைகளின் தளபதி என்ற முறையிலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையிலும், முப்படைகளையும் பொலீஸாரையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகக் கருதிக்கொண்டு, ஒப்பந்தத்துக்கு வேட்டு வைக்கும் பணியை மும்முரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

அதுவே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நியாயமான பணிக்கு முழுச் சவாலான நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதையும், ரணிலின் அரசு அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதையும் மனப்பூர்வமாக விரும்பாத சக்திகளின் வழிகாட்டுதலும் ஆசீர் வாதமும் அதிகாரமும் இலங்கைப் படைகளின் ஒரு பிரிவு மீது பிரயோகிக்கப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதே இச்சிக்கல்களுக்கெல்லாம் மூலகாரணம்.

சமாதான முயற்சிகளுக்கு முற்றாக ஆப்புவைக்கும் இந்தப் போக்கைக் கட்டுப்படுத்த முடியாத கையாலாகத்தனத்தில், அமைதி முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் பிரதமர் ரணிலின் அரசு உள்ளது என்பது வாஸ்தவம் தான்; யதார்த்தமானதுதான்.

ஆனால், அதைப் பகிரங்கமாகக் கூட வெளிப்படுத்திக் கண்டிக்காமல், ரணிலின் அரசு இது விடயத்தில் வெறும் பார்வையாளர் மௌநிலையுடன் செயற்பட்டுவருவதுதான் மோசமானது.

அரசின் இந்த அரசியல் போக்கு சமாதான முயற்சிகளை அர்த்தமற்றதாக்குகின்றது என விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே.

## கைதடியில் வீதிகள் பலவும் பலத்த சேதமடைந்த நிலையில்

### புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கைதடி,ஜூலை4

கைதடிப் பிரதேசத்தில் உள்ள வீதிகளில் பெரும்பாலானவை கடந்த பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இதனால் வாகனங்களில் செல்வோரும், பாதசாரிகளும் பல்வேறு சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி வடக்கு வீதி, கைதடி தென்கிழக்கு வீதி, கைதடி வளர்மதி வீதி, கைதடி கிழக்கு வீதி, கைதடி கள்ளிநகர் வீதி, கைதடி இராஜபுரி வீதி, கைதடி - கோப்பாய் வீதி உட்பட பல வீதிகள் இவ்வாறு பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

அபிவிருத்திப் பணிகளில் தமது பகுதி திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்று கைதடி பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

எனவே, இப்பகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இனிவரும் காலங்களிலாவது சம்பந்தப்பட்ட வீதிகளைப் புனரமைக்க சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-75)

## நாட்டு நடப்பு

### இழிவுற்றார் தமிழர் இன்று

கண்ணகி கூண்டில் ஏறி
கால் சிலம்புக்கு வழக்கு மாடி
எண்ணரும் புகழ் பரப்பி
இறைவியாய் ஏற்றம் பெற்றாள்
கண்மணி இந்த மண்ணில்
கசிப்பதைக் காய்ச்சி விற்று
எண்ணரும் கொடுநோய் பரப்பி
இறக்க வைக்கிறாள் மானிடத்தை
கண்ணகி வழக்கைக் கேட்டு
கதி கலங்கியே மன்னன் மாண்டான்
கண்மணி கசிப்பை உண்டோர்
ஈரல் கருகியே மாண்டார்
பண்டைய தமிழர் பண்பை
பாரதும் வியந்தது அன்று
இன்றைய தமது பண்பால்
இழிவுற்றார் தமிழர் இன்று.

- விகடகவி

## நிர்வாகசேவை நியமன வழக்கில் இடையீட்டு மனு விசாரணைக்கு ஏற்பு!

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட இலங்கை நிர்வாகசேவை நியமனங்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட வழக்குத் தொடர்பான இடையீட்டு மனு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதியரசர் மார்க் பெர்னாண்டோ தலைமையில் நீதியரசர்கள் அமீர் இஸ்மாயில், நிஹால் ஜயசிங்க ஆகியோரின் முன்னிலையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது. வடக்கு - கிழக்கிற்கென இலங்கை நிர்வாகசேவை தேர்வில் தெரிவுசெய்யப்பட்டோர் இவ்வழக்கில் இடையீடு செய்வதற்கான விண்ணப்பமும் உயர் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசதரப்பு சட்டத்தரணி ரஜீவ் குணதிலக இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் தற்போதுள்ள நிலைமைக்குத் தீர்வு ஏற்படுத்துவது குறித்த திட்டம் ஒன்றை வழக்கின் அடுத்த தவணையின்போது (எதிர்வரும் 22ஆம் திகதி) சமர்ப்பிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

வழக்கில் இடையீடு செய்தவர்களின் சார்பில் சிவலோகநாதன், திருமதி ராஜகுலேந்திரா ஆகியோரும், இடைக்காலத்தடை கோரிய மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் சாலியபீரிஸ், வெலியமுன ஆகியோரும் ஆஜராகினர்.

இலங்கை நிர்வாகசேவைக்கு அகில இலங்கை ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டோர் தமது நியமனத்துக்காகக் காத்திருக்கும் வேளையில் -

வடக்கு - கிழக்கிற்கென விசேட பரீட்சை மூலம் இலங்கை நிர்வாகசேவைக்கு - நேர்முகப் பரீட்சைக்கு 109பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் - நியமனங்களை வழங்குவதை ஆட்சேபித்தே இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அ. அட்டைக்கு புதிதாக விண்ணப்பிப்பவர்கள் நடமாடும் சேவைக்கு வரத்தேவையில்லை!

### பணி இணைப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை4

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கான நடமாடும் சேவைகளுக்கு புதிதாக விண்ணப்பிப்பவர்கள் வரவேண்டியதில்லை என சேவை இணைப்பாளரும் நல்லூர் பிரதேச செயலருமான வி.முருகையா அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பிப்போர், தத்தமது பகுதி கிராம அலுவலர்களிடம் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களுடன் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர்களிடமே மீள ஒப்படைக்குமாறும் அவர் தெரிவித்தார்.

தமக்கு வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளில் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருப்பவர்களும் - அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களும் - நடமாடும் சேவைக்கு நேரில் சமுகமளிக்க வேண்மென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவுக்கான மேற்படி நடமாடும்சேவை எதிர்வரும் 17ஆம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் இடம்பெறும் என்றும் இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## மல்லாகம் சந்தி காவலரணில் மீண்டும் இராணுவத்தினர்!

மல்லாகம் சந்தியில் உள்ள இராணுவ காவலரணில் இராணுவத்தினர் மீண்டும் நிலைகொண்டுள்ளனர்.

அரசு - விடுதலைப் புலிகளுக்கு இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் இதிலிருந்து விலகிச்சென்று முகாமில் தங்கியிருந்தனர்.

மல்லாகம் நீதிமன்ற வளாகம் மற்றும் ஏழாலை சந்தை என்பவற்றில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் முகாம் அமைத்ததைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாக மல்லாகம் சந்தி காவலரணிலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம)

## தன்னிச்சையான போக்கில்

## அரசசார்பற்ற நிறுவனங்களை செயற்பட அனுமதிக்க வேண்டாம்!

### கிராம அலுவலருக்கு அரச அதிபர், அறிவுறுத்தல்

வலி.வடக்கு,ஜூலை4

அரச அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரின் அனுமதியின்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் தன்னிச்சையாக மக்களுக்கு சேவையாற்ற அனுமதிக்கவேண்டாம் என யாழ். அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

கிராம அலுவலர்களுக்கு இது தொடர்பாக அறிவுறுத்தும்படி பிரதேச செயலர்களுக்கு யாழ். அரச அதிபரினால் அறிவித்தல விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச அதிபரின் முன் அனுமதியின்றி தன்னிச்சையாக இயங்கி வருகின்றன. இவர்கள் கிராம அலுவலர்களிடம் கையொப்பத்தைப் பெற்று அரச அதிபரின் அனுசரணையுடன் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாக வெளியில் காட்டிக்கொள்கின்றார்கள்.

இத்தகைய செயற்பாட்டின் மூலம் பல்வேறு பிரச்சினைகளுககும் யாழ். செயலகம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்கள் சிபார்சுக் கடிதங்கள் கேட்டுவரும் சந்தர்ப்பங்களில் அத்தகைய கடிதங்களை வழங்குவதை கிராம அலுவலர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஒழுங்கமைப்பு இன்றியும் சரியான தொடர்புகள் இன்றியும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்குவதன் மூலம் ஒரு நபரே ஒன்றுக்கு மேற்பட்ட உதவிகளை பெற்றுக்கொள்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் இயங்கும் புனரமைப்புக்குழு சிபார்சு செய்யும் திட்டங்களை மட்டுமே இத்தகைய நிறுவனங்கள் செயற்படுத்தவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு சம்பந்தமான செயற்றிட்டங்கள் மாவட்ட மட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

### நாளை

ஆனி 20
சனிக்கிழமை
(05.07.2003)
திதி : ஷஷ்டி
முன்னிரவு 7.18
நட்சத்திரம: பூரம்
பிற்பகல் 1.26வரை.
சுபநேரம் : 2.57-4.27
ராகுகாலம் : 08.57-10.27
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

முழுப் பொய்யைவிட, உண்மை கலந்த பொய்யை எதிர்கொள்வது கடினம்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடத்தப்படும்

## தையல் பயிற்சிக்கான

### விண்ணப்பம் கோரல்

மேற்படி பயிற்சி பெறவிரும்புவோர்,

- ✦ சுயமாக விண்ணப்பம் தயாரித்து அனுப்பவேண்டும்.
- ✦ 25 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும்.
- ✦ மாதாந்த கட்டணமாக 300/- செலுத்தவேண்டும்.
- ✦ முடிவு திகதி இம்மாதம் 5ஆம் திகதி (05.07.2003)

கிழமை நாள்களில் நிறுவனம் திறந்திருக்கும்.

எமது முகவரி:

**செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்**

16/2, சீனியர் லேன்,

கலட்டி, யாழ்ப்பாணம்.

(19746) (24-19-15)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 17 - 05 - 1945

மறைவு 14 - 07 - 2002

### அமரர் சிவகுரு வேலாயுதம் (மெக்கானிக்)

திதி: 04.07.2003

எங்கள் குடும்பத் தலைவராய் ஒளிதந்து
எம்மை எல்லாம் வாழ வைத்த எங்கள்
அன்புத் தெய்வமே! ஓராண்டு சென்றதையா - ஆனாலும்
எம் இதயத்தின் வேதனை ஆறாது.

இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*இல. 83, கண்டி வீதி.*
*சாவகச்சேரி.*

- குடும்பத்தினர்.

(19673) (25-19-15)

## பசுமாடு திருட்டு தொடர்பாக ஒருவர் கைது!

தென்மராட்சி,ஜூலை4

பட்டியில் கட்டியிருந்த பசுமாடு இரவோடிரவாக கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் கடந்த 26 ஆம் திகதி கைதடி வடக்கில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக இதே இடத்தைச்சேர்ந்த கட்டியன் சின்னத்துரை என்பவரை சாவகச்சேரி பொலீஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து கடந்தசெவ்வாயன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

சந்தேக நபரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைதடி வடக்கைச்சேர்ந்த நாதன் செல்லப்பன் என்பவரின் பசுமாடே திருட்டுப்போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## விவசாய அழிவுகள் விவரம் பதிய விண்ணப்பம்

தென்மராட்சி,ஜூலை4

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கடந்த கால விவசாய அழிவுகளால் ஏற்பட்ட நஷ்டம் தொடர்பான விவரங்கள் விவசாய சம்மேளத்தினால் பதிவுசெய்யப்படவுள்ளன.

இதற்கான படிவங்கள் எதிர்வரும் ஆறாந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், மீன் விவசாய செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளின் விவரங்களும் திரட்டப்படவுள்ளதால், இப்பகுதி விவசாயிகள் தமது குடும்ப விவரங்களுடன் வருகைதருமாறு விவசாய சம்மேளத்தினர் அறிவித்துள்ளனர். (எ-117)

## அலுவலகம் இடம்மாற்றம்

வலி.வடக்கு,ஜூலை4

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைச் செயலகம் கடந்த வாரம் தொடக்கம் மல்லாகம் சந்திக்கு அருகில் இயங்கிவருகிறது.

இதுவரை காலமும் இந்தத் தலைமைச் செயலகம் தெல்லிப்பழையில் உள்ள சித்தியம்புளியடி என்னும் இடத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10-86)



உ
சிவமயம்

## செல்வச்சந்நிதி ஆலயம்

### தொண்டமனாறு

### ஆனி உத்தர உற்சவம்

நிகழும் சுபானு வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள் ஞாயிறு 06.07.2003 காலை 7மணியளவில் விசேட அபிஷேகம் நடைபெற்று முருகப்பெருமான் வீதிவலம் வந்தருளுவார்.

செல்வச்சந்நிதி.
தொண்டமனாறு. (24-19-15)

ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர்
(ஆலய உரிமையாளர்). (19782)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228
(சி-28666)

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(24-15-19)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*மட்டுவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த*

செல்வன் கண்மணி உமாசுதன் B.A.

அவர்கள் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (H.N.D.M.) இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு நாம் அகமகிழ்வதுடன், அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று மேன்மையடைய வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*

திரு.திருமதி விக்னேஸ்வரன் உமாராணி,
வே.மகாலிங்கம் (மாமா) குடும்பத்தினர்.

*"உமாவாசம்"*
*மட்டுவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

(19784)
(24-19-15)


SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது

be sharp

யாழ்ப்பாணத்தில்

SHARP



- உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
- யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப் பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
- நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up

BROWNS GROUP BG ESTD 1875 Browns Group of Companies

TNT Grafix

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# சுயதொழில்களை ஆரம்பித்து வாழ்வில் முன்னேற்றம் கண்ட பட்டதாரிகள் மூவர்

## வாகன உதிரிப்பாக உற்பத்தியில் சமன்மலி சுவர்ணதிலக்க



**ரி.என்.எல். தொலைக் காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் சமன்மலி சுவர்ணதிலக்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலவும் செவ்வி கண்டபோது தமது அனுபவத்தை சமன்மலி விளக்குகிறார்.**

### வர்த்தக ஸ்பெஷல்

ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்குநேர் நிகழ்ச்சியில் கடந்த முதலாம் திகதி தோன்றி, தமது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் சமன்மலி சுவர்ணதிலக்க.

திருமதி சமன்மலி சுவர்ணதிலக்க வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வியாபார நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகின்றார். இவருக்கு செலான் வங்கி 12 லட்ச ரூபா கடன் வழங்கியுள்ளது.

டி.எம்.காமினி அனுர சாந்த தமது சொந்தக் காணியில் அரிசி ஆலையொன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவருக்கு செலான் வங்கி 15 லட்சம் ரூபா கடன் வழங்கியுள்ளது. அரிசி ஆலைக்கான நிர்மாண வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. ஆலைக்கான இயந்திரங்களைப் பொருத்தும் வேலைகள் இடம்பெறுகின்றன.

டி.சமிந்த குமார என்ற பட்டதாரி தமது சொந்த ஊரிலேயே சில்லறைக் கடையொன்றை ஆரம்பிக்கவுள்ளார். செலான் வங்கி இவருக்கு 12 லட்ச ரூபா கடன் வழங்கியுள்ளது. சில்லறைக் கடை அமைப்பதற்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன.

சுயதொழில் புரியத் துணிந்த இந்த மூன்று பட்டதாரிகளையும் ரி.என்.எல்.தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலவும் செவ்வி கண்டனர்.

சமன்மலியின் செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

வடமேல் மாகாண முதலீட்டு சபையின் தலைவராக பிரபல தொழிலதிபர் தேசமான்ய லலித் கொத்தலாவல அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு ஏராளமான நிறுவனங்கள் சொந்தமாக இருக்கின்றன.

வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சருமான காமினி ஜெயவிக்கிரம பெரேரா தொழில் இல்லாது தவிக்கும் பட்டதாரிகள் சிலரை தேசமான்ய லலித் கொத்தலாவலவிடம் அனுப்பி வைத்துள்ளார். பட்டதாரிகள் லலித் கொத்தலாவலவைச் சந்தித்தனர்.

அவர் சுயதொழில் முயற்சி பற்றி இந்தப் பட்டதாரிகளுக்கு விளக்கியுள்ளார்.

பட்டதாரிகள் பட்டம் பெற்ற பின்னர் தொழில் வாய்ப்புக்களை தேடி அலைகின்றனர். சொந்தக் காலில் நிற்க ஓரளவேனும் முயற்சி செய்வதில்லை. ஒரு தொழில் முயற்சியை ஆரம்பித்தால் தமது வேலை இல்லாப் பிரச்சினை தீருவதுடன் மேலும் சிலருக்கு தொழில்வாய்ப்பு வழங்கக்கூடிய அளவுக்கு அவர்கள் உயரலாம் என்று லலித் கொத்தலாவல பட்டதாரிகளுக்கு விளக்கினார்.

அத்துடன், தொழில் முயற்சிகளில ஈடுபட விரும்புவோருக்கு எதுவித பிணையுமின்றி செலான் வங்கி மூலம் கடன் பெற்றுத் தருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

அதற்கமைய செலான் வங்கியில் கடன்பெற்று முன்னேற்றம் கண்டுள்ள சமன்மலி தனது செவ்வியின் போது கூறியதாவது:-

*கேள்வி:-* நீங்கள் பல்கலைக் கழகத்துக்குச் சென்றதன் பின்னணியில் ஒருகதை இருக்கும். அது சில வேளை சோகக்கதையாகவும் இருக்கலாம். நீங்கள் உங்கள் கதையைக் கூறுங்கள்.

*பதில்:-* நான் கிராமப்புறத்தைச் சேர்ந்தவள். கும்புக்கஹூமுல்ல மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று நான் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானேன். இந்தச் சந்தர்ப்பத்தில் எனது தந்தையை இழந்தேன்.

எனது தாயாரும் எனது சகோதுராகளும் எனக்கு உதவினர்.

நான் 2001ஆம் ஆண்டு பல்கலைக் கழக பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு தொழில் தேடிக் கொண டிருந்தேன். பல விண்ணப்பங்களை அனுப்பிக்கொண்டிருந்தேன். பட்டதாரிகளுக்கு ஆங்கில வகுப்பொன்றை அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆரம்பித்தார். இந்த வகுப்பு நான்கு மாதங்கள் நீடித்தன.

ஆங்கில ஆசிரியர் மூலம் நாங்கள் தேசமான்ய லலித் கொத்தலாவலவைச் சந்திக்கச் சென்றோம்.

அவரிடம் ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்வதே எமது நோக்கமாக இருந்தது.

தொழிலுக்கான விண்ணப்பங்களுடன் சென்ற எமக்கு லலித் கொத்தலாவல முதன்முதலாக சுயதொழில் பற்றி எம்மிடம் தெரிவித்தார். அவர் தனது வாழ்க்கை வரலாற்றை எம்மிடம் கூறினார்.

இதன் பின்னர்தான் எனக்கு சுயதொழில் பற்றிய எண்ணமே எழுந்தது.

எமக்கு சொத்துக்கள் இருக்கவில்லை. எனது குடும்பத்தினர் தமது உழைப்பை எனது கல்விக்குச் செலவிட்டனர். லலித் கொத்தலாவல நாம் சுயதொழில் ஆரம்பிப்பதாக இருந்தால எதுவித பிணையுமின்றி வங்கிக்கடன பெற்றுத்தருவதாகக் கூறினார். எனக்கு மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையமொன்றை ஆரம்பிக்கும் எண்ணம் இருந்தது. எனது காதலர் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் குறித்து அறிந்திருந்தார். மார்ச் மாதத்தில் தான் லலித் கொத்தலாவலவைச் சந்தித்தோம்.

மே2ஆம் திகதி எனது திருமணம் நடைபெற்றது. பின்னர் ஜூன் 12ஆம் திகதி மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தை ஆரம்பித்தோம்.

*கேள்வி:-* இந்தக் காலகட்டத்தில் உங்கள் திருமணமும் நடைபெற்றிருக்கின்றது. உங்கள் வர்த்தக ஸ்தாபனத்தையும் திறந்துள்ளீர்கள். இது ஓர் அதிர்ஷ்டமான கால கட்டம் என்று கூறலாமல்லவா?

*பதில்:-* இதற்கு மூலகாரணமே தேசமான்ய லலித்கொத்தலாவல தான். இவர் எமக்கு ஒரு சுயதொழிலை ஆரம்பிக்க உதவினார். அவர் எமவைப் பற்றி விசாரிக்கவும் இல்லை. நீங்கள் அர்ப்பணிப்புடன் தொழிலை நடத்துவீர்கள்; நேர்மையாக நடந்து கொள்ளுங்கள் எனத் தெரிவித்து செலான் வங்கியிலிருந்து கடன் பெற்றுத் தந்தார்.

ஓரிரு வாரங்களில் வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொண்ட வரலாறு கிடையாது. ஆனால், லலித் கொத்தலாவல அவர்கள் எம் மீது நம்பிக்கை வைத்து இக்கடனைப் பெற்றுக் கொடுததுள்ளார். இந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

- இவ்வாறு கூறினார் திருமதி சமன்மலி சுவர்ணதிலக்க.

மற்றும் இருபட்டதாரிகளின் செவ்விகள் பின்னர் பிரசுரிக்கப்படும்.

# புலிகளுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்கள்; இரு ஈ.பி.டி.பியினர் மீது மக்கள் தாக்குதல்!

## வவுனியாவில் சம்பவம்; பதற்றத்தையடுத்து பொலீஸ் பாதுகாப்பு

வவுனியா,ஜூலை4

வவுனியாவில் புலிகளுக்கெதிராக நேற்று முன்தினம் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் பொது மக்களால் தாக்கப்பட்டனர்.



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு பண்டத்தரிப்பு பட்டினம் மற்றும் கிராம அலுவலக ஊழியர்கள் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வளாகத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதனைப் படத்தில் காணலாம். (ஒ-185)

நேற்று முன்தினம் காலை 11மணியளவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் வவுனியா பஸ்தரிப்பு நிலையமருகே துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதில் ஈடுபட்டிருந்தனர். துண்டுப் பிரசுரம் புலிகளைச் சாடுவதாக அமைந்திருந்தது. மக்கள் இத்தகவலை புலிகளின் வவுனியா அரசியல் அலுவலகத்துக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த புலிகளுக்கும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதன்போது அருகில் இருந்த பொதுமக்களால் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரும் தாக்கப்பட்டனர்.

தாக்கப்பட்ட இருவரும் வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். வவுனியா பொலீஸாரும், கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்ற சூழ்நிலையை அடுத்து வவுனியா நகரில் மேலதிக பொலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது (ஐ)

### கடந்த மோதங்களில்

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 50ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

தென்மராட்சி,ஜூலை4

முழுமையான வசதிகளின்றி இயங்கும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 50ஆயிரம் பேர் வெளிநோயாளர் பிரிவிலும், சுமார் 2ஆயிரத்து 500 பேர் வார்ட்டுகளில் தங்கியும் சிகிச்சை பெற்றுள்ளதாக ஆஸ்பத்திரி புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களை விட சுமார் 17ஆயிரம் பேர் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த ஆஸ்பத்திரியில் மீள் நியமனம் செய்யப்பட்ட பதிவு வைத்தியர் ஒருவரும் உதவி வைத்தியர் ஒருவரும் கடமையாற்றுகின்றனர்.

மின்சார வசதி, தண்ணீர் வசதி இல்லாத நிலையிலும், மெத்தைகளில்லாத 25கட்டில்களிலும் தரையிலும் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஜூன் 30ஆம் திகதி வரை 46 ஆயிரத்து 775 பேரும், வார்ட்டுகளில் 2ஆயிரத்து 438 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் ஜனவரி மாதத்தில் 8ஆயிரத்து 591 பேரும், பெப்ரவரி மாதத்தில் 6ஆயிரத்து 638 பேரும், மார்ச் மாதத்தில் 7ஆயிரத்து 942பேரும், ஏப்ரல் மாதத்தில் 9ஆயிரத்து 784பேரும், மே மாதத்தில் 7ஆயிரத்து 146 பேரும், ஜூன் மாதத்தில் 6ஆயிரத்து 704 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவிலும் வார்ட்டுகளிலும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, கரைச்சி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இப்பிரதேசங்களில் வார்ட் உள்ள ஒரேயொரு ஆஸ்பத்திரி சாவகச்சேரி ஆஸ்பத்திரி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## பளுதூக்கும் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக பளுதூக்கும் அணி நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியான பளுதூக்கும் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. (ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த

### திரு.இரா.சோமசுந்தரம்

(கிராம அலுவலர் - I)



அவர்கள் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் உயர்திரு.பா.சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையை யிட்டு அவரை பெருமகிழ்ச்சியுடன் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

க.சிறீதரன், இ.ராஜ்பவான்.
அல்வாய் தெற்கு. (19821)(21-19-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 - 07 - 1942

உதிர்வு 04 - 06 - 2003

### அமரர் ஐயன் பரமலிங்கம்

முப்பத்தொரு நாளானாலும் முகம் மறந்து போகாது
எப்போதும் எம்முன்னே எந்நாளும் வாழ்வீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5ஆம் வட்டாரம்,
அனலைதீவு. (19785)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14 - 01 - 1949

மறைவு 04 - 06 - 2003

### அமரர் சிவஞானம் புவனேஸ்வரி

இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

43/2, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (19786)(21-15-19)
- குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



### அமரர் வி.கே.சிவானந்தன்

(அதிபர் தரம் 2-1, உப அதிபர் யா/நெல்லியடி ம.ம.வி.)

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டி, சபீண்டீகரண நிகழ்வுகள் 06.07.2003 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து வைபவத்தில் கலந்து, அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை
கரவெட்டி (C/28720)
-குடும்பத்தினர்.

## திருமுறை விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,ஜூலை4

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்கத்தின் சைவத் திருமுறை விழாவும், சைவசமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ ந.ஜெகதீஸ்வரக்குருக்களும் வாழ்த்துரையை இளைப்பாறிய ஆசிரியர் க.கதிரேசுவும், சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசியர் அ.சண்முகதாஸ், இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், ஆசிரியர் ஜெ.கோகலே ஆகியோரும நிகழ்த்தவுள்ளனர்.

அன்றையதினம் காலை 8 மணிக்கு உயரப்புலம் ஆலயத்தில் பூசை மற்றும் வழிபாடு இடம்பெற்று திருமுறைச சுவடிகளுடன் ஊர்வலம் ஆரம்பமாகி விழா மண்டபத்தைச் சென்றடையவுள்ளது.

(ஒ-10)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை4

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட வேலணை மேற்கு நடராசா மகா வித்தியாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதாகவும் -

இப்பதவிக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவக கல்வி வலயத்துக்கு அனுப்பிவைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் அறிவித்துள்ளார். (எ-4)

## யாழ்.இந்துவில் பொது அறிவு போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.இந்துக் கல்லூரி விஞ்ஞான சங்கத்தின் கணித, விஞ்ஞான பொது அறிவுப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. தரம் 6-8 கனிஷ்ட பிரிவாகவும், தரம் 9-11 இடைநிலைப் பிரிவாகவும், தரம் 12-13 சிரேஷ்ட பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை ரீதியாக மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஒரு பாடசாலையில் இருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் விண்ணப்பம் செய்தால் அப்பாடசாலையிலும் பரீட்சை நிலையம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)


### தேவை

நிறுவனத்திலுள்ள பதவிக்கு (எழுதுநர், பராமரிப்பாளர்) ஒருவர் தேவை.
மனையியல் துறையில் ஆர்வமுள்ளவர்கள் விரும்பப்படுவர்.
07.07.2003 திங்கள் பி.ப. 2மணிக்கு நேரில் வரவும்.

**தூரிகை**
செங்குந்தா வீதி, கல்வியங்காடு.
(19820) (21-26-19-15)


### ENGLISH
Spoken and Grammar

By: BRITTO

ஆரம்பம்: 06.07.2003
(ஞாயிறு)
பி.ப.2.00 (பு.நே.)
O/L கணித வினாவிடை வகுப்பு
திரு. சிவானந்தன்

இடம்:
மதுகல்வி நிறுவனம்
டச்சு வீதி,
இருபாலை, கோப்பாய்.
(19816) (21-26-19-15)


## 45 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 17 - 11 - 1954

விண்ணில் 20 - 05 - 2003

### அமரர் பொன்னுத்துரை சிதம்பரநாதன்

(வோச் மோகன்)

மறக்க முடியாத உறவே!
உன் மாசற்ற மதிமுகம்
மனதைவிட்டு மறையாதடா!
மண்ணை விட்டு நீ சொல்லாமல்
சென்றது ஏன் மகனே!
ஒன்பது பேர் ஒன்றாய்க் குலவி
அண்ணா தம்பி என உன்னை
ஆசையுடன் அழைப்பதெப்போ?
எம் உடன் பிறப்பே!
காலமெலாம் உற்றதுணை
என்றிருந்தேன்
பாதியிலே சென்றதேனோ?
பாசமிகு அப்பாவே! பாரினில்
நாமிருவர் பார்ப்பதெப்போ?
உம்முகத்தை
உறவால் மைத்துனன் ஆகி
உள்ளத்தால் உற்ற சகோதரனாய்
வாழ்ந்தவனே!
பிரியமான மாமாவே!
ஆசைச் சித்தப்பாவே நீ
மண்ணுலகை உதறிவிட்டு
விண்ணுலகு ஏகியதேன்?
கண்ணீரோடு விடைதேடிக்
காத்திருக்கிறோம் வாராயோ ஒரு முறை!
இவ் உறவுகளுக்காய்.

393/34, கோவில் வீதி,
நல்லூர். (c/28719) (21-25-15-19)
-குடும்பத்தினர்.

## மேற்பார்வையாளர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

பின்வரும் தகைமைகள் உடைய ஆண்பாலோர் மேற்படி பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்**

அ. கல்வித்தகைமை:- க.பொ.த. (உயர்தரம்) கற்றிருத்தல்

ஆ. அகவை:- 25தொடக்கம்- 40வரை

இ. உயரம்:- 5அடி 3அங்குலம்

**குறிப்பு**

அ. விண்ணப்ப முடிவுநாள் - 15.07.2003

ஆ. அடிப்படை மாத ஊதியம்

$$\frac{4500\text{-}5700}{10\times110} + 2000 = 6500.00$$

இ. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 26.07.2003, 27.07.2003 ஆகிய இரு நாள்களில் தமிழீழப் போக்குவரவுக் கழகம், புதுக்குடியிருப்புப் பணிமனையில் நடைபெறும்.

ஈ. நேர்முகத் தேர்வுக்கு வருகைதருவோர் தங்கள் கல்வி, அகவை என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.

உ. விண்ணப்பப்படிவங்களை புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி, முழங்காவில், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பட்டறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(21-27-15-19) (19806)

### மணி இராசகுளத்தில் அமைத்த

# முகாமை புலிகள் அகற்றாவிட்டால் தேவையற்ற பிரச்சினைகள் எழுமாம்!

### கண்காணிப்புக்குழுத் துணைத் தலைவர் கூறுகிறார்

திருகோணமலை,ஜூலை4

கிண்ணியா மணி இராசகுளம் பகுதியிலுள்ள தமது பயிற்சிமுகாமை விடுதலைப் புலிகள் அகற்றாவிட்டால மேலும் பிரச்சினைகளை வளர்ப்பதாக அமைந்துவிடும்.

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் துணைத் தலைவா தோமஸ் ஹேராக்லண் தெரிவித்துள்ளார்.

மணி இராசகுளம் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்தமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை பற்றி நேற்றுமுன்தினமிரவு பி.பி.ஸிக்கு செவ்வியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாமிற்கு நாம் பல தடவை விஜயம் செய்துள்ளோம். இம முகாம் அமைந்திருக்கும் இடத்திற்குரிய பகுதியை வரைபடங்களில பார்க்கும்போது அது அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளது என்பது எமக்குத் தெரியவந்துள்ளது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே விடுதலைப் புலிகள் இந்த முகாமை அந்தப் பகுதியில் அமைத்துள்ளனர்.

எனவே, விரைவாக இந்த முகாமை அகற்றுவதே நல்லது என விடுதலைப் புலிகளிடம் நாம் கோரியுள்ளோம்.

அடுத்த ஓரிரு தினங்களில் புலிகள் இந்த முகாமை அகற்றவேண்டும்.

போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இந்த முகாமை அகற்றாவிட்டால் அவர்கள் தங்களுக்கு மேலும் பிரச்சினைகளை அதிகரித்துக் கொண்டதாகவே முடியும் - என்றார் அவர். (எ-12)

### ஐ.தே.கட்சி நிர்வாகக் குழுக்கூட்டம்

# இன்றும், நாளையும் எம்பிலிப்பிட்டியவில்

கொழும்பு,ஜூலை4

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிர்வாகசபைக்கூட்டம் இன்றும், நாளை சனிக்கிழமையும் எம்பிலிப்பிட்டியவில் நடைபெறும். இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன என்று கட்சியின் ஊடகப் பேச்சாளரான கயந்த கருணாதிலக்க எம்.பி. தெரிவித்தார்.

அரசின் பொருளாதாரக் கொள்கையின் பலாபலன்களையும் அமைச்சுகளின் செயற்றிட்டங்களையும் விளக்கும் கண்காட்சி ஒன்று இவ்விரு தினங்களிலும் நடைபெறும்.

கடந்த ஓராண்டில் அரசு அடைந்திருக்கும் வெற்றிகள் குறித்தும் அரசின் எதிர்காலத்திட்டங்கள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

### மோட்டார் சைக்கிள்களுக்காவது

# வாகன, சாரதி அனுமதிப்பத்திரங்களை கிளிநொச்சியில் வைத்து வழங்குங்கள்!

### திணைக்களத்திடம் அதிகாரி கோரிக்கை

கிளிநொச்சி,ஜூலை4.

மோட்டார் சைக்கிள்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தினையாவது கிளிநொச்சியில் வைத்து வழங்குமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திடம் கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்துப் பிரிவு ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் வாகன அனுமதிப்பத்திரங்கள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் என்பன வைத்திருக்கப்படவேண்டிய தேவை இருக்கவில்லை. அதேவேளை, அவற்றைப் பெறக்கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.

ஆனால், தற்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைய முற்படும்போது வன்னிப்பகுதி மக்களிடம் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கோரப்படுகின்றன.

இதனால், வன்னிப்பகுதி வாகனங்களும், வாகன சாரதிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைய முடியாதநிலை தோன்றியுள்ளது.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கென நடமாடும் சேவையொன்றை நடத்தவுள்ளதாக அரசால் கடந்த வருடம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஒரேயொரு தடவை இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியே கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்துப் பிரிவு ஆணையாளர் கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிள்களுக்கான வாகன அனுமதிப பத்திரங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களையாவது நடமாடும் சேவை மூலமோ அல்லது வேறு விதமாகவோ வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்விடுத்துள்ளார். (ஒ-12-ரி)

# ஜப்பான், அமெரிக்கா மேலும் கூடுதல் நிதியுதவி

கொழும்பு,ஜூலை4

ஜப்பானும் அமெரிக்காவும் இலங்கைக்கு மேலும் கூடுதலான உதவித் தொகைகளை வழங்கியுள்ளன.

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தனது தேசத்திட்டங்களுக்குச் செலவிடுவதற்காக ஜப்பான் 7கோடி 28லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது.

இதன்மூலம் ஜப்பான் ஒஸ்லோ மாநாட்டிலும் டோக்கியோ மாநாட்டிலும் அளித்த உறுதிகளை நிறைவேற்றியுள்ளது.

ஜப்பான் இதற்கு முன்னரும் இலங்கைக்கு உதவித் தொகைகளை வழங்கியிருக்கிறது. தன்னுடைய பொறுப்பில் பல அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது.

அமெரிக்கா, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயத்துக்கு 12கோடி 10லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது இதன்மூலம் அமெரிக்கா தனது வாஷிங்டன் மாநாட்டு உறுதிமொழியை நிறைவேற்றியிருக்கிறது.

# மரண அச்சுறுத்தலைக் கண்டித்து பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம்

பத்திரிகையாளரொருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை எதிர்த்து நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கொழும்பு மெக்கலம் வீதியில் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் சுலோகங்கள் தாங்கிய அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பத்திரிகையொன்றில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக விளம்பரம் செய்து லட்சக்கணக்கான ரூபாவை மோசடி செய்த நபரொருவர் குறித்து பத்திரிகையில் பிரஸ்தாப பத்திரிகையாளர் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அது மட்டுமன்றி, இது குறித்துப் பொலீஸாருக்கும் அறிவித்து மோசடி நபருக்கு வந்திருந்த காசுக்கட்டளைகளைக் கிடைக்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மோசடிப் பேர்வழி இந்தப் பத்திரிகையாளருக்குத் தொலைபேசிமூலம் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இதைக் கண்டித்தும் பொலீஸார் மோசடிப் பேர்வழிமீது எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதையும் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

### திரைப்படக் காட்சி

பிரான்ஸில் தயாரான புலம் பெயர்ந்தோர் வாழ்வைச் சித்திரிக்கும் 'முகம்' என்னும் தமிழ்த் திரைப்படம் யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இப்படத்தின் நெறியாளர் அருந்ததியும் கலந்துகொள்வார்.

ஆர்வலர்கள் அனைவரையும் இதில் பங்குபற்றி பயனடையுமாறு புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-8)

## தெய்வீக ஸ்தலங்களில்



நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய இந்து பரிபாலனசபை நடத்திய சமய பாடப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதம விருந்தினர் ஆறு.திருமுருகன், ஆலய அர்ச்சகர் கு.தியாகராசா குருக்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர்.




இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி மந்துவில் கிழக்கு தாளையடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற சங்காபிஷேகத்தின்போது ஆலய பிரதம குருக்கள் சமயக் கிரியைகளை மேற்கொண்ட காட்சி. *(படம்: தென்மராட்சி செய்தியாளர்)*

# நம்பி வருபவர்களுக்கு வரம் அளித்திடும் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர்

இலங்கையிலே தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயங்கள் இரண்டு உள்ளன. அவற்றில் ஒன்றுதான் இந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் கோயிலாகும். இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழா 2003.06.28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இது தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறும். இக்கோயில் மாங்குளத்தில் இருந்து 15 மைல் தொலைவிலும், முல்லைத்தீவிலிருந்து 15 மைல தொலைவிலும் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் என்னும் இடத்தில் அமையப்பெற்றுள்ளது.

மேற்படி தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் தலவிஷேடம் கொண்டது. அத்துடன், இவ்வாலய மூலஸ்தானத்திலுள்ள சிவலிங்கமானது தாமாய் தோற்றம் பெற்ற சுயம்புலிங்கமாகும். இந்த ஆலயத்தின் மேன்மைமிகு சிறப்புகளில் ஒன்றாய் விளங்குவதில் தீர்த்தக்கேணி முக்கியம் வாய்ந்தது. அதாவது, உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்ற இந்து ஆலயங்களிலும் காணமுடியாத சிறப்பு மிக்கதோர் தீர்த்தக்கேணி இவ்வாலயத்தில் மட்டுமே உள்ளது. மேற்படி கேணி சிறந்த கட்டடக் கலை, சிற்பக் கலை அம்சங்களைக் கொண்டது.

**அருட்செல்வம்**
**முல்லைத்தீவு**

இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்கள் பலவற்றைச் சென்று பார்த்தவர்கள் கூறும் ஒரே வார்த்தை ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய தீர்த்தக்கேணியைப் போல நாம் எங்குமே பார்க்கவில்லை என மிகுந்த அதிசயத்துடன் கூறுவதை அனைவருமே கேள்விப்பட்டிருக்கின்றோம். அவ்வளவு பெருமைமிக்க இந்த தீர்த்தக்கேணி தற்போது கடந்தகாலப் போரினால் பலத்த சேதம் அடைந்து காணப்படுகின்றது. இந்தத் தீர்த்தக்கேணியை மீண்டும் புனரமைப்பது சிவனடியார்களாகிய நமது முக்கிய கடமையாகவுள்ளது.



இந்த சிவன் ஆலயம் பற்றி ஒரு வரலாற்றுக் கதை உண்டு. அதாவது தற்போது ஆலயம் அமையப்பெற்றுள்ள இடத்தின் காணியில் ஒரு விவசாயி எள் விதைத்து வந்தான். அவன் ஒருமுறை எள் விதைத்து அறுவடை செய்தபின் காணியிலே எஞ்சியிருந்த ஒட்டுக்களை மண்வெட்டியால் கொத்தி அகற்றிக்கொண்டிருந்த போது திடீரென அவனது மண்வெட்டி ஒரு கல்லிலே கொத்திவிட அக்கல்லிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கியது.

அவ்வேளை, அந்த விவசாயி அக்கல்லினை கட்டியணைத்தபடன் இறைவன் அவனது கனவிலே தோன்றி தனக்கு அவ்விடத்திலே ஆலயம் அமைக்குமாறு வேண்டிக் கொண்டார். அதன்படி தோன்றியதே இவ்வாலயம் என்பது ஒரு வரலாற்றுக் கதை. இக்கல்லின் காயம் இச்சிவலிங்கத்தில் இன்றுவரையும் காணப்படுகிறது. இவ்வாலயத்தின் இறைவனாரை வேகாவனம் எனவும், இறைவியை பூலோகநாயகி எனவும் அடியார்கள் அழைப்பர்.

இந்த சிவன் ஆலயத்தில் 16 நாள் திருவிழா நடைபெறுகிறது. இவற்றிலே 13ஆம் நாள் திருவிழாவான வேட்டைத்திருவிழா சிவன் அடியார்களைப் பக்தியின் உச்சிக்கே கொண்டுசென்றுவிடும். அதாவது, இறைவனார் இறைவிக்குத் தெரியாமல் அருகிலுள்ள காட்டிற்கு வேட்டைக்குச் சென்றுவிடுவார். இதன்போது அடியார்களும் தாமும் வேடனாக வந்து தமது நேர்த்திக்கடன்களைச் செய்வர்கள். அடியவர்கள் தம் நோய் பிணிகளை நீக்க வேட்டைக் கோலம் தரிப்பர். அதாவது அடியார்கள் உடல் முழுவதும் கரியினைப் பூசி, வாகை மரக்குழைகளை ஆடையாக உடலிலே உடுத்தி, அக்குழையினால் தலைப்பாகையும் அணிந்து இறைவனுடன் காட்டிலிருந்து ஆலயத்துக்கு மீள்வார்கள்.

இதனைக் கண்ணுற்ற இறைவியானவள் ஆலயத்தின் பிரதான வாயிலை மூடி இறைவனை உள்ளே வர அனுமதிக்கமாட்டாள். இதனால் வாயிலில் இருவருக்குமிடையிலே வாதாட்டம் இடம்பெறும். இதனைக் கண்டுகளிக்க அடியார் கூட்டம் வாயிலை சூழ்ந்து கொள்ளும். சிறிது நேரத்தின் பின் வாயிலை இறைவியானவள் திறக்க இறைவனாரும், பக்தர்களும் உள்ளே செல்வார்கள்.

வேடனாக நேர்த்தி செய்பவர்களுக்கு வேட்டுவத்தலைவன் தலைமை தாங்க அவனது ஆணைக்கு அவர்கள் கட்டுப்பட்டு தமது கடன்களை செய்து பின் தீர்த்தக்கேணியில் நீராடி தமது நேர்த்திக்கடன்களை முடித்துக்கொள்வர். இத்திருவிழா எல்லா அடியார்களும் பார்க்கவேண்டிய முக்கிய திருவிழாவாகும். இது எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

மேலும் தேர்த்திருவிழாவும் இவ்வாலயத்தில் சிறப்பாய் நடைபெறும். ஆனால், ஆலயத்தின் தேர், வாகனங்கள் யுத்த நடவடிக்கைகள் காரணமாக முற்றாகச் சிதைந்துபோய்விட்டன. இலங்கையின் வரலாற்றிலேயே முக்கிய அம்சமாயும், இந்துக்களின் கலைப் பொக்கிஷமாயும் விளங்கும் இவ்வாலயத்தினை சீரழியவிடாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்து சமயத்தவர் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

ஆலயத்தின் சிதைவுகளை சீர்படுத்திட ஆலய நிர்வாகத்துக்கு பெரும் நிதி நெருக்கடி காணப்படுகிறது. இதற்கு எல்லா அடியார்களும் கட்டாயம் உதவவேண்டும்.

15 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட

# தொழில் நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்துமாறுகோரி மனு

## தொழில் திணைக்களம் தாக்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை4

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (ச.தொ.ச) தொடர்பான வழக்கில் 15 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் தொழில் நீதிமன்றினால வழங்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப் படுத்த உத்தரவிடுமாறு கோரி தொழில் திணைக்கள யாழ். அலுவலகம் யாழ்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னா ச.தொ.ச. நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். அது தொடர்பாக அப்போது அந்த ஊழியர் யாழ். தொழில் நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருந்தார். அவரது வழக்கை விசாரித்த தொழில் நீதிமன்றம் அவரை உடனடியாக மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் -

அத்துடன், நஷ்டஈட்டையும் அவருக்கு வழங்க வேண்டும் எனவும் -

மேற்படி நிறுவனத்துக்கு உத்தர விட்டிருந்தது.

ஆனால், இதுவரை சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலையோ, நஷ்டஈடோ வழங்கப்படவில்லை.

எனவே, அந்தத் தீர்ப்பினை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் நடைமுறைப்படுத்த வேண்டும் என உத்தரவிடுமாறு கோரியே குறிப்பிட்ட தொழிலாளியின் சார்பாக தொழில் திணைக்களம் யாழ். நீதி மன்றில் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கு விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதேபோன்று வேறொரு வழக்கு இலங்கை மின்சார சபைக்கு எதிராக அண்மையில் தொழில் திணைக்களத்தினால் யாழ்நீதிமன்றில் தாக்கல்செய யப்பட்டது. அந்த வழக்கில் முன்னர் தொழில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மின்சார சபை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா உத்தர விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

(ஒ-4)

---


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மாவட்டச் செயலகத்தில் தலைமையக உதவி அரசாங்க அதிபராகப் பதவி வகித்து தற்போது கரவெட்டி பிரதேச செயலக பதில் பிரதேச செயலராகப் பதவியேற்றுள்ள

**திரு.வே.வீரபத்திரபிள்ளை**

அவர்களுக்கு எமது வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துறைமுகம்,
பருத்தித்துறை. (19828) (28-12-18) துறைமுக உத்தியோகத்தர்கள்.


---


## அறிவித்தல்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப்பகுதி, கட்டைவேலிக் கோயிற்பற்று, கரவெட்டி குறுணிக் குறிச்சியிறை நொச்சியொல்லை நிற 8 கொண்ட, நெல்லியடி முடக்காடு என்னுமிடத்தில் அமைந்துள்ள ஆதனம், சுந்தரலிங்கம் வாமதேவன், சுந்தரலிங்கம் ஜெயதேவன் என்பவர்களிற்கும், பங்காளருக்குமுரிய ஆதனமாகும்.

அவ்வாதனத்தில், அதில் சொந்தம் ஏதுமற்ற சிலர் அடாத்தாக அத்துமீறி சட்டவிரோதமாக உட்புகுந்து ஆட்சி செய்ய முயல்வதாக அறியவருவதால், குறித்த ஆதனத்தில் எவரும், உட்புகவோ, ஆட்சி செய்யவோ முயற்சிக்க வேண்டாம் என இதனால் எச்சரிக்கப்பட்டு அறிவித்தல் தரப்படுகிறது.

அவ்வாறு அத்துமீறி சட்டவிரோதமாக உட்புகுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கலாபவனம்
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

சின்னத்தம்பி குணசீலன்
(சுந்தரலிங்கம் வாமதேவன்,
சுந்தரலிங்கம் ஜெயதேவன்
ஆகியோரின் அற்றோனி தத்துவக்காரர்)

(C/28729) (28-12-18)


---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜசோதி வடிவேலு (சோதி)

திருமதி இராஜசோதி வடிவேலு (சோதி) நேற்று (3.7.2003) வியாழக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் தம்பதிகளின் ஆசை மகளும் வடிவேலுவின் அன்பு மனைவியும் விநாயகமூர்த்தி, தபோதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுவாமிநாதன், சிவநாதன், பரமநாதன் ஆகியோரின் உடன் பிறப்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*'சோதி இல்லம்',*
*கடகப்புலம், K.K.S.வீதி,*
*சுன்னாகம்.* (C28730) (29-28-12-13)

தகவல்:
சேது விபுலானந்தா.

### செல்லையா கனகரட்ணம்

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும்கொண்ட செல்லையா கனகரட்ணம் நேற்று (3.7.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சுப்பையா - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் தனவதியின் அன்புக் கணவரும் தமிழ்ச்செல்வன்(பிரான்ஸ்), ஜெகதாம்பாள், காலஞ்சென்ற தவச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அகிலேஸ்வரன், சீதா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆருஜென், ஆருரன், லக்ஷனா ஆகியோரின் பேரனும் நமசிவாயம், மனோன்மணி ஆகியோரின் சகோதரனும் பராசசிங்கம்(அருமை உணவகம், யாழ்.), அன்னசோதி, அருள்பாக்கியம், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சிவஞானம், புஸ்பவதி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம்,*
*சுருவில் றோட்,*
*புளியங்கூடல்.* (19832) (29-28-12-13)

தகவல்:
மனைவி.

---

# நல்லூர் பிரதேச சபை கேள்வி அறிவித்தல்

**21.07.2003ஆம் திகதி முதல் 31.12.2003ஆம் திகதி வரையரான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றது.**

| | திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | கோக்குவில் சந்தை (குளப்பிட்டி சந்தி) | கோண்டாவில் 4ஆம் கட்டை வீதியோர மீன் வியாபாரம். |
|---|---|---|---|
| 01. கேள்விப்பத்திர கட்டணம் (வற்வரி உட்பட) | 600.00 | 600.00 | 300.00 |
| 02. கேள்வி பிணைப் பணம். | 3000.00 | 3000.00 | 1000.00 |
| 03. ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை | 140850.00 | 75150.00 | 5000.00 |
| 04. கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதி திகதி. | 16.07.2003 புதன்கிழமை | (12.00 மணி மதியம் வரை) | |
| 05. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதி. | 17.07.2003 வியாழக்கிழமை | (12மணி மதியம் வரை) | |
| 06. கேள்வி திறக்கும் திகதி | 17.07.2003 | மாலை 3.00 மணிக்கு | |

குறிப்பு : சித்திபெறும் கேள்விதாரர்கள் ஏற்றுக்கொண்ட தொகை முழுவதையும் உடன் செலுத்த வேண்டும். கோரப்பட்ட தொகையுடன் 20% வற்வரியும் மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமைச் செயலகத்திலும். உப-அலுவலகங்களிலும் அறிந்துகொள்ளலாம்.

**நல்லூர் பிரதேச சபை**
**திருநெல்வேலி,**
**03.07.2003.**

(சி-28726) (31-28-12-18)

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
பிரதேச சபை,
நல்லூர்.

---

# வடக்கு - கிழக்கு மாகாணம் கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலை

01) நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில்(ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-7 அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரினால், கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02) மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 750/-ஐ காசாக யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலுள்ள மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி பிற்பகல் 03.00மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை (இரு பிரதிகளில்) பெற்றுக் கொள்ளலாம்.

03 ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப் பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும். அத்துடன் தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் செயலாளர், புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை, கட்டடங்கள் மகளிர் விவகார அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, தலைவர், கேள்விச் சபை, புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள். மகளிர் விவகார அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம் உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி அன்று பிற்பகல் 03.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

06) வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| வேலை விவரம் | கேள்விப்பிணை ரூபா | நிறைவேற்று எந்திரியின் முகவரி |
|---|---|---|
| அச்சுவேலி சுற்றயல் கூறில் வெளி நோயாளர் பிரிவு நிர்மாணித்தல். (கட்டம் 1) | 50.000/- | நிறைவேற்று எந்திரி அலுவலகம். மாகாண கட்டடங்கள் திணைக்களம். கடற்கரை வீதி. யாழ்ப்பாணம். தொ.இல. 021-2222634 தொ.நகரி 021-2222634 |

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை,
கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
27.06.2003

தலைவர்,
அமைச்சு கேள்விச்சபை.

(C/28727) (28-12-13)

# கைதடி சைவச்சிறுவர் இல்லத்தை மீண்டும் பொறுப்பேற்க உள்ளேன்!

## அதன் முன்னாள் நிர்வாகி தெரிவிப்பு

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தை மீண்டும் தாம் பொறுப்பேற்று நடத்த விருப்பதாக இல்லத்தின் முன்னால் நிர்வாகியும் அஷ்டலஷ்மி வெளியீட்டகத்தின் அதிபருமான ஆகந்தையா தெரிவித்துள்ளார்.

கைதடி பலநோக்கு சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இது குறித்து 'உதயன்' செய்தியாளரிடம் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மேற்படி சைவச்சிறுவர் இல்லத்தை இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நான் முன்னர் நிர்வகித்து வந்தேன். 1990ஆம் ஆண்டின் பின்னர் இந்த இல்லத்தை இந்துசமயப்பேரவை பொறுப்பேற்று நடத்திவந்தது. நானும் கொழும்பில் உள்ள எனது நிறுவனத்தோடு ஒன்றியிருந்ததனால் என்னால் இதனை நடத்தமுடியாதிருந்தது.

இந்த நிலையில், அண்மையில் இந்த இல்லத்தில் ஏழைச் சிறுமியர்களை மனித நாகரிகத்திற்கு ஒவ்வாத வகையில், பாலியல் ரீதியில் இதனை நிர்வகித்தவர்கள் இம்சைப் படுத்தியுள்ளனர். அத்தோடு, எமது புனிதமிகு இந்துசமயமும் இந்தச் சமபவத்தினால் ஏளனத்திற்குள்ளாகியுள்ளது.

வந்தோரை வரவேற்கும் கைதடி மண்ணும் அவமானத்தால் தலைகுனிந்துள்ளது. எனவே, மதத்தின் பெயரால் நடக்கும் இப்படியான அநியாயங்களைத் துணிந்து நின்று நாம் தட்டிக் கேட்பதோடு நில்லாமல் அந்த இல்லம் நல்ல முறையில் மீண் டும் இயங்குவதற்குத் தோள கொடுக்க வேண்டும்.

வெகுவிரைவில் நான் இந்த மண்ணிலே தங்கி நின்று மீளவும் இந்த சைவச்சிறுவர் இல்லத்தை நடத்த இருக்கின்றேன். அந்தவகையில், ஆண் பிள்ளைகளையும் மற்றும் ஊனமுற்ற ஆண்களையும் இந்த இல்லத்தில் இணைத்து அவர்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உழைக்க விரும்புகின்றேன்.

எனது இந்த எண்ணத்திற்கு பலர் செயல்வடிவம் கொடுக்க முன் வந்துள்ளனர் - என்று அவர் தெரிவித்தார். (எ-75)



சுழிபுரம், வழக்கம்பரை மோகன் அரங்கில் இடம்பெற்ற கலை விழாவின்போது நாதஸ்வர வித்துவான் இ.சிவகுமாருக்கு நாதஸ்வர மேதை வி.கே.பஞ்சமூர்த்தி பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: சுழிபுரம் செய்தியாளர்)

# மிதிவெடியினால் பாதிப்புற்றோர் நலன் குறித்து பயிற்சிப் பட்டறை

## கோப்பாயில் இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை4

மிதிவெடியினால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கான விசேட பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று காலை 9.30 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கனேடிய அரசின் அனுசரணையுடன் யாழ் செயலகத்தில் உள்ள கண்ணிவெடியகற்றும் பிரிவு நடத்துகின்ற இப்பயிற்சிப் பட்டறையில் பிரதமவிருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் கலந்துகொள்ளவுள்ளார். யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்துவைப்பார்.

இன்று முழுநாளும் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் மிதிவெடியினால் பாதிப்படைந்தவர்களுக்கான எதிர்காலத்திட்டங்கள் வகுத்தல் மற்றும் அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் பொதுமக்கள், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள மிதிவெடி விழிப்புணர்வுக் குழுவின் அங்கத்தவர்கள், யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டு நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-8)

# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஞாயிறன்று மஹாகும்பாபிஷேகம்

## இன்று எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை4

ஈழத்தில் உள்ள பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 27 ஆண்டுகளின் பின்னர் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை திருக்குடத்திருமஞ்சன பெருஞ் சாந்திப் பெருவிழா (மஹாகும்பாபிஷேகம்) நடைபெறவுள்ளது.

கடந்த பல வருடங்களாக நாட்டில் நடைபெற்றுவந்த யுத்த நிலைமைகள் காரணமாக மேற்படி ஆலயத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பூசைகள், திருவிழாக்கள் எதுவும் நடைபெறவில்லை.

1976 ஆம் ஆண்டில் இவ்வாலயத்தில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நிகழ்வுக்கு பின்னர் 27 ஆண்டுகள் கழிந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெறவுள்ளது.

மஹாகும்பாபிஷேக நிகழ்வுக்கான பூர்வாங்க கிரியைகள் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் பூஜா கிரிஜா சிரோண்மணி சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிரமணிய சிவாசாரியார், பிரதிஷ்டா திலகம் சிவஸ்ரீ ஐ.கை.வாமதேவ சிவாசாரியார் ஆகியோர் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், தமிழ்நாட்டைச் சேர்ந்த மயிலாடுதுறை, நின்றியூர், திருநன்னாறு, மதுரை, பரமகுடி, சிதம்பரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த பல சிவாசாரியர்களுடன் ஈழத்து சிவாசாரியார்கள் பலரும் கும்பாபிஷேகக் கிரியா நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை காலை விமான கலசஸ்தாபனம், பிம்பஸ்தாபனம் ஆகியவை நடைபெற்று அட்டபந்தன மருந்து சாத்துதல் நிகழ்வு இடம்பெறும். காலை 9 மணிமுதல் இரவு 9.30 மணிவரை அடியார்கள் எண்ணெய் சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

ஆறாம்திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மகாபூர்ணாகுதி நடைபெற்று காலை 9.30 மணிக்கு விமான கலச திருக்குடத்திருமஞ்சன பெருஞ் சாந்தி நடைபெறும்.

பூர்வசப்தமியும், உத்தரநட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் சிம்மலக்கினமும் கூடிய நல்வேளையான முற்பகல் 10 மணிக்கு கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

இம்மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 48 நாள்களுக்கு தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்.

மண்டலாபிஷேக காலங்களில் தினமும் வேதாகமம், பூசை, திருமுறை இன்னிசை, சிறப்புச்சொற்பொழிவு என்பன நடைபெறும். (எ-152)

### பரிசளிப்பு விழா

சங்கானை,ஜூலை4

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். (ஓ-29)

### கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை4

தொழில்துறைத் திணைக்களத்தால் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த அலுவலர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று மாவட்ட முகாமைத்துவ உதவியாளர் அறிவித்துள்ளார். (ஓ-10)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்

தொடர் இல. 2751814 இருந்து 2769238 வரை

சீட்டிழுப்பு இல. 1414

திகதி 02.07.2003

வெற்றி எண்கள் 03 17 22 46 50

போனஸ் எண் 40

ஜக்பொட் பரிசு

ரூபா.2,343,250/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,343,250/- | 2,343,250/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 95 | 10,000/- | 950,000/- |
| 3 | 5,366 | 500/- | 2,683,000/- |
| 2 | 91,478 | 20/- | 1,829,580/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 112,381 | 10/- | 1,123,810/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,029,940/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 1,500,000/-

தொடர் இல. 3739112க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 ஜூலை 05ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில்: விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2760863-8-57
2752047-4-21
2763921-9-37
2756254-0-88
2752664-7-13

PHOENIX O&M


# கடமைக்கு வராத சிற்றூழியர்கள் பதவி விலகியவர்கள் ஆகிறார்கள்!

## போராட்டத்தையடுத்து சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஜூலை4

சுகாதாரத்துறை சிற்றூழியர்களின் எல்லாவிதமான 'விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கடமைக்கு வராத ஊழியர்கள் அவர்களது பதவியைவிட்டு விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் இதனைக் கடுமையாக அமுல் செய்யும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக வைத்தியசாலை கனிஷ்ட ஊழியர்கள் சுகாதார அமைச்சுக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேவேளை, சுகாதார சிற்றூழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மேற்கொண்டுவரும் திட்டத்தை அடுத்தே இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார சிற்றூழியர் சங்கம், சுகாதார அமைச்சு மேற்கொண்டுவரும் நடவடிக்கை அர்த்தமற்றது என்றும் சிற்றூழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை. எனவே, தொழிற்சங்க நடவடிக்கையில் தாம் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலை கனிஷ்ட ஊழியர்களின் வேலை நிறுத்தம் நேற்று மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள பல வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் மந்த போக்கில் நடைபெற்றுவருகின்றன.

# அரியாலை யூதாததேயு ஆலயத்தில் மீண்டும் ஞாயிறு முதல் திருப்பலி

அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி வழிபாடுகள் பல வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த ஆலயப் பிரதேசம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் திருப்பலி நடைபெறும்.

இந்த ஆலய பங்குத்தந்தையாக அருட் திரு. றெஜி இராஜநாயகம் அடிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மேற்படி ஆலயம் பலத்த சேதம் அடைந்துள்ளது. இடிபாடுகள் அகற்றப்பட்ட ஆலயத்திலேயே தற்போது திருப்பலி நடைபெறவுள்ளது. விரைவில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

# தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ பேக்கரித் தொழிலில் அனுபவம் உள்ளவர்கள்.
- ★ விற்பனையாளர்கள்.
- ★ இரவுக்காவலாளிகள்.
- ★ வாகனச் சாரதிகள்.
- ★ வேலை பழக விரும்புபவர்கள்.

ஆண்/பெண் இருபாலாரும் நேரில் தொடர்புகொள்ளவும். தகுதிக்கேற்ற சம்பளம் தரப்படும்.

தொடர்பு:- *இல. 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(19823)(21-14-16)



## செரண்டிப் விமான சேவை SEN 106

**05 ஜூலை 2003 மாலை 4.30 மணிக்கு எமது விமான சேவையில் ரிக்கட் பெற்றவர்கள் கவனத்திற்கு!**

எமது சேவையில் நேரமாற்றம் ஏற்பட்டுள்ளதால் எமது காரியாலய தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளவும். *அன்றைய தினம் விமானம் புறப்படும் நேரமும், சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்க வேண்டிய நேரமும்:–*

**1) விமான சேவை இல.102**

சிங்கள மகாவித்தியாலயம் வருகை: காலை 6.00 மணிக்கு

விமானம் புறப்படும் நேரம்: காலை 8.30 மணிக்கு.

**2] விமானசேவை இல.104**

சிங்கள மகாவித்தியாலயம் வருகை: காலை 9.15

விமானம் புறப்படும் நேரம்: நண்பகல் 12.00

தொடர்பு: 021 222 3916, 0777-714871

**முகாமையாளர், யாழ்ப்பாணக் காரியாலயம்,**

***செரண்டிப் விமான சேவை***

(சி-28718) (26-24-14-16))



## விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையில் நுகர்வுப் பொருள்களை விற்பனை செய்யும் முதல்தர கம்பனி ஒன்றுக்கு யாழ். மாவட்டத்தில் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு விநியோகத்தர் விற்பனைப் பிரதிநிதி (D.S.R.) தேவை.

*விண்ணப்பிக்க விரும்புவோர் 10. 07. 2003 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.*

**விளம்பர இல. 1942,**
**C/o உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(19812) (26-24-14-16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும் சமூக சேவையாளருமாகிய

**திரு. கந்தன் அப்புக்குட்டி**

அவர்கள் 20.06.2003 இல் யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையை யிட்டு நாம் அவரை பெருமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரதுபணி மேலும் சிறக்க இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*அறிவாலயம்,*
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

- குடும்பத்தினர்.

(19811) (25-24-14-16)



## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 30 - 04 - 1974



கண்நெகிழ 04 - 07 - 1996

**செல்வன் இராசேந்திரம் யூட் றொசான்**

எங்கள் அன்பின் றொசானே!
ஆசையின் மணிவிளக்கோ பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் ஒளிப் பிளம்பே!
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் விட்டுவிட்டு
மீளாத் துயில் கொண்ட அன்புச் செல்வமே!
ஆண்டுகள் ஏழு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை
விட்டகலாதையா!

*41/2, ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் நினைவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(19801) (26-24-14-16)


## சமய சந்நிதியில்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய புதிய திருமஞ்ச வெள்ளோட்டவிழா இன்று மு.ப.11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது..

மஞ்ச உற்சவம் நாளை மாலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

அரியாலை,ஜூலை4

நீர்வேலி தெற்கு அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனிப்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும்:(ஒ-10-17)

★ ★ ★

அரியாலை,ஜூலை4

யாழ். மேலை வண்ணைநகர் ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8.45மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(ஒ-10-17)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை4

கோண்டாவில் வடக்கு அன்னுங்கை ஸ்ரீ சிவபூதராயர் ஆலய தேர்த திருவிழா நாளை காலை நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளைமறுதினம் காலை இடம்பெறும். (ஒ-10-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை4

மல்லாகம்,கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ-10)

### மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூலை4

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இன்று மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறவுள்ளது.

நாவலர் தர்மகர்த்தா சபையின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பாடசாலை வளவில் அமைந்துள்ள நால்வர் ஆலயத்தில் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து திருவாசகம் ஓதுதல் மற்றும் பண்ணிசை என்பனவும் இடம்பெறவுள்ளன. (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை4

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்துமன்றம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசையும் திருவாசக விழாவும இன்று காலை 9 மணிமுதல் கல்லூரியின் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஒ-10)

★ ★ ★

கோப்பாய் சைவ நற்சிந்தனைக் கழகம் நடத்தும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை விழா இன்று பி.ப. 3 மணிக்கு த.தர்மராஜா தலைமையில் வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் இடம்பெறவுள்ளது.(ஒ-10)


## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
## திருமஞ்ச வெள்ளோட்ட விழாவும், மஞ்ச உற்சவமும
### (மஞ்சத்திருவிழா)

*அம்பிகை அடியார்களே!*

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருமஞ்ச வெள்ளோட்ட விழா இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெறும். மஹோற்சவ தின மஞ்ச உற்சவம் (மஞ்சத் திருவிழா) நாளை (05.07.2003) சனிக்கிழமை மாலை 7.30 மணியளவில் இடம்பெறுவதற்கும் திருவருள் கைகூடியுள்ளது.

எனவே, இத்திருமஞ்ச வெள்ளோட்ட, உற்சவ தினங்களில் கலந்து கொண்டு அம்பிகையின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

Note: மஞ்ச உற்சவ தினத்தன்று (மஞ்சத் திருவிழா) மஹேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும். ஆலய பரிபாலன சபையினர்.

(19824)(25-14-16)



## நீர்வேலி கந்தசுவாமி கோயில்
## முக்கிய அறிவித்தல்

மேற்படி ஆலயத்தில் இராஜகோபுரம், தேர் வேலைகள் செய்வதற்கு பரிபாலன சபையால் கடந்த 01.08.2002 ஆம் திகதி திருப்பணி விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டு இருந்தும், ஆலயத்தின் செயற்பாட்டைக் குழப்பும் நோக்கத்துடன் ஆலயத்தின் பெயரில் 01.07.2003 ஆம் திகதி தேர்த் திருப்பணித் தொண்டர்கள் எனும் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்திற்கும் ஆலய பரிபாலன சபைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆலயத்தின் பெயரில் தேர் செய்வதற்கோ, மரங்கள் தறிப்பதற்கோ, நிதி சேர்ப்பதற்கோ ஆலய பரிபாலன சபை, எவருக்கும் அனுமதிவழங்கவில்லை. ஆலயத்தின் பெயரில் பரிபாலன சபை தவிர வேறு தனிப்பட்ட எவருக்கும் நிதி, பொருள் உதவியினை வழங்கவேண்டாம் என முருகன் அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

நீர்வேலி,
02.07.2003. (15-24-14-16)

**பரிபாலன சபை,**
**நீர்வேலி கந்தசுவாமி கோயில்.**

(19819)



## கெயார் சர்வதேசம் - இலங்கை
### சமூக அணி திரள்தல் / பான்மை அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்
### ஆட்சேர்ப்பு

**(1 வெற்றிடம் - கொழும்பு)**

ஆற்றலும் கடின உழைப்பும் கொண்ட இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. *பதவி:* சமூக அணிதிரள்தல் / பான்மை அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்
2. *கல்வித்தகைமைகள்:* அடிப்படை சமூக விஞ்ஞானம் பட்டப்படிப்பு / டிப்ளோமா
3. *முன்அனுபவம்:* தொடர்புடைய துறையில் மூன்று வருட அனுபவம்
4. *சம்பளம்:* தகைமைக்கு அமைவாக கெயாரின் கவர்ச்சியான நன்மைகளையும் கொண்டிருக்கும்.
5. *நியமனம்:* புதுப்பிக்கக்கூடிய ஒப்பந்த அடிப்படை
6. *களவேலை:* யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முழங்காவில் கெயார் அலுவலகங்களில் உள்ள சமூக அணிதிரள்தல் / பான்மை அபிவிருத்தி பயிற்சி உதவியாளர்களை வழிநடத்துதல் / நெறிப்படுத்துதல்.

தகுதியுடையோர் சுயவிவரக்கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன்

**Director Human Resources, Care International -Sri Lanka,**
No. 74, gregorys Road, Colombo - 7
e - Mail: hr@care.lk

என்ற முகவரிக்கு 13-07-2003ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

☞ விண்ணப்பங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு, முழங்காவிலில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கப்படலாம்.

**பணிப்பாளர் - மனிதவள அபிவிருத்தி**
**கெயார் சர்வதேசம்,**
**இலங்கை.**

(சி-28721) (19-24-14-16



# நெடுந்தீவு பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட (இக்ராட்) ஒப்பந்தகாரரிடமிருந்தும் உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாரர், ஒப்பந்த வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் என்பனவற்றிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *செயலாளர், பிரதேச சபை, நெடுந்தீவு* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 23-07-2003 ஆம திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 22-07-2003ஆம் திகதி நண்பகல் 12.00மணிவரை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 23-07-2003ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்று பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். உரிய வேளையில் ஒப்பந்தகாரர் சமுகமளித்திருக்கலாம்.

| இல. வேலையின் பெயர் | கேள்வி வைப்புப்பணம் | கேள்விப்பத்திர பணம் | பொருள்கள் சேவைகள் வரி |
|---|---|---|---|
| 01. குருக்கள் மடம் கோட்டைக்காடு வீதி தாரிட்டு புனரமைத்தல் | 4000.00 | 400.00 | - |

மேலதிக விவரங்களை நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

நெடுந்தீவு பிரதேச சபை,
நெடுந்தீவு.
02-07-2003

ச.பொ.தில்லைநாதன்
செயலாளர்,
பிரதேச சபை, நெடுந்தீவு.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க விழிப்புணர்வு நடவடிக்கைகள்!

யாழ்ப்பாணம்,ஜுலை4

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு ஈடுபட்டுள்ளது.

அந்த நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக சிறுவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு கருத்தரங்குகளை நடத்துவதற்கு அக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த பாதுகாவலர்கள் மற்றும் இல்லத் தந்தையர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு எதிர்வரும் 9ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 37 சிறுவர் இல்லங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில், 'சாந்திகம்' உள சமூக பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

சிறுவர் இல்லங்களின் நிர்வாக இயக்குநர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் தயா. சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சட்டத்தரணிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் மற்றும் சிறுவர் தொடர்பான சேவை அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளன. இக்கருத்தரங்கில் குறிப்பிட்ட சிறுவர் இல்லம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் உடைய பிரதிநிதி கலந்துகொள்வது கட்டாயமானது என யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு எதிர்வரும் 21ஆம் திகதி யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் தனியார் கல்வி நிறுவனத்தினர், தமது நிறுவனத்தின் விவரங்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

# முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்பட்டால் தனிஅலகு குறித்து காங்கிரஸ் வலியுறுத்தாது!

## செயலர் ஹசன் அலி தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை4

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவில் முஸ்லிம்களுக்கு நியாயமான இடம் வழங்கப்பட்டால் தனி அலகு குறித்து முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி இத்தகவலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது :

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அரசாங்கத்தின் ஆலோசனைகளில் முஸ்லிம்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் - முஸ்லிம்களே கூடுதலான பிரதிநிதிகளைக் கொண்டுள்ளனர். எனவே, இடைக்கால நிர்வாகம் பற்றிய அரசாங்கத்தின் ஆலோசனைகளில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் குறிப்பிடப்படவேண்டும்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஆலோசனை பற்றி எமது கருத்துக்களை இன்னும் ஓரிரு தினங்களில் பிரதமரிடம் கையளிக்கவுள்ளோம். இதுதொடர்பான எமது அரசியலமைப்புக்குழு அடிக்கடி கூடி ஆராயும்.

இடைக்கால நிர்வாகசபை வரைவில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கினால் தனிஅலகு குறித்து முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தாது என்பது உண்மை. இதன் அர்த்தம் தனி அலகுக் கொள்கையை முஸ்லிம் காங்கிரஸ் முற்றாகக் கைவிட்டு விட்டது என்பதல்ல என்று ஹசன் அலி தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக சபையானது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும் வரையுள்ள இடைக்காலத்துக்கு மட்டும் இயங்குவது.

அந்த இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படுமானால் அந்தச்சபை இயங்கும் இடைக்காலத்தில் மட்டும் முஸ்லிம் காங்கிரஸ் தனி அலகை வலியுறுத்தாது என்றே பொருள் கொள்ளவேண்டும் என்று ஹஸன் அலி மேலும் தெரிவித்தார்.

## காவலரண் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜுலை4

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி சனசமூக நிலையமருகே இருந்துவந்த தமது காவலரணை படையினர் அகற்றியுள்ளனர். (ஓ-173)


**தவறிவிட்டன**

சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த தம்பிஐயா கமலநாதன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரமும் அதனுடன் தொடர்புடைய மேலும் சில பத்திரங்களும் 20.06.2003 அன்று தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் மானிப்பாயிலுள்ள ஆனந் ஸ்குடியோவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சன்மானம் வழங்கப்படும். (19827) (31-13-18)

**தவறிவிட்டன**

தவராசா சுதர்சன் என்பவரின் தே.அ.அ. (802771304 V), மோட்டார் சைக்கிள் பற்றுச்சீட்டு மற்றும் சில முக்கிய ஆவணங்களுடன் ஒரு தொலைப்பணமும் பேஸ்"டன் நேற்று 03.07.2003 காலை 9 மணிக்கும் 11மணிக்கும் இடையில் சுன்னாகம் சந்திக்கும் புன்னாலைக் கட்டுவன் வீதிக்கும் (கொத்தியால் மயானத்திற்கும்) இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

சின்னத்தம்பி தவராசா விவேகானந்தா வீதி இணுவில்.

மஞ்சத்தடி. T.P:070-213219. (19829) (31-13-18)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்

விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த

**சொக்கத்தங்கம்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்:
11.00,3.00,7.00 (பி.நே.) (19830) (31-13-18)

**நாகம்ஸ் சுன்னாகம்**

முரளி. தேவயானி. அப்பாஸ். ஆனந்தராஜ் நடித்த

**காதலுடன்** (ரீல்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பி.நே.)

(C28882) (31-18-13)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சத்தியராஜ். ரம்பா. செந்தில். கபாலி. மணிவண்ணன் நடித்த

**மிஸ்ரரி**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
தினசரி இரவு 8.45 இற்கு

**THE BOURNE IDENTITY**

(C28683) (31-18-13)

**லிபேட்டி** அச்சுவேலி

எம்.ஜி.ஆர்., ராதாசலுஜா நடித்த

**இதயக்கனி** (ரீல்ஸ்)

காட்சி நேரம் 3.00, 7.00(பி.நே)

**RED DRAGON** (ரீல்ஸ்)

தினசரி காலை 11.00 மணிக்கு (ஆங்கிலப்படம்)

(C28683) (31-18-13)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு.



9ஆம்திகதி வரை

(ரீல்ஸ்)

சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்

தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு இரவு 9.30

(C28684) (31-18-13)


# செய்திக்கொத்து

## பேச்சுப் போட்டி

ஊர்காவற்றுறை,ஜுலை4

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தரம் 6 முதல் 11 வரை கல்விகற்கும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் பேச்சுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் ஊர்காவற்றுறை, காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளில் இருந்து தலா இரண்டு மாணவர்கள் வீதம் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர் அணிகளுக்கிடையிலான வினாடிவினாப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 2மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபை விசேட ஆணையாளர் கு.கணேசலிங்கம் தெரிவித்தார். (ம-16)

## திறந்த பல்கலை மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஜுலை4

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் உயர் தொழில் ஆங்கிலக் கற்கைக்கு விண்ணப்பித்தோரை எதிர்வரும் 10 ஆம், 11ஆம் திகதிகளில் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவினை மேற்கொள்ள வரும்போது சம்பந்தப்பட்டவர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றின் மூலப் பிரதிகள் மற்றும் பாஸ்போட் புகைப்பட அளவிலான இரு படங்கள் என்பவற்றை எடுத்துவரவேண்டுமென நிலையத்தின் பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார். (எ-12)

## பாடசாலையில் தண்ணீர் தாங்கி

யாழ்ப்பாணம்,ஜுலை4

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலய மாணவர்களின் குடிதண்ணீர் வசதியைக் கருத்திற்கொண்டு பாடசாலை வளவில் தண்ணீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இம்மாத இறுதிக்குள் இந்தப் பணிகள் பூர்த்தி அடையும் என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10-135)

## பாதீனியம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை4

வடமராட்சிப் பிரதேசத்தில் 'பாதீனியம்' களையின் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது.

பொலிகண்டிப் பகுதியில் இக்களையானது அதிகளவில் காணப்படுகிறது. (ஒ-10-70)

## கட்டடப் பொருள் வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை4

பண்டத்தரிப்பு, பிரான்பற்று கிராமத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் 25 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்கு வீடமைப்புக்கான கட்டடப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் விநியோகிக்கப்பட்டுள்ளன. (ஒ-10-185)

## நூல் அறிமுகவிழா

கொழும்புத்துறை,ஜுலை4

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டுள்ள தில்லைச் சிவனின் "காவல்வேலி" சிறுகதை நூல் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நூல் அறிமுக உரையை சட்டத்தரணி சோ.தேவராசாவும் சிறப்புரையை கலாநிதி க.சொக்கலிங்கமும் நிகழ்த்துவர். (எ-30-135)

## முன்பள்ளி கட்டட திறப்பு விழா

சண்டிலிப்பாய்,ஜுலை4

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகமும், பண்டத்தரிப்பு செபமாலை மாதா சனசமூகமும் இணைந்து நடத்தும் செபமாலை மாதர் முன்பள்ளி புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின செயலாளர் பி.வீக்ரர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி கிருஷ்ணசாமி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் உதவி பிரதேசசெயலர்களான செல்வராசா, முபாஸலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-135)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கனகராசா

(பொறியியல் வல்லுநர். வடபிராந்திய போக்குவரத்து சபை. காரைநகர்)

காரைநகர், மொந்திப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகராசா கடந்த 02.07.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் - சிவமணி தம்பதிகளின் அன்பு மகனும் ரத்னாவின் அன்புக் கணவரும் கஜேந்தினியின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், அமரர் தவராசா, செல்வராசா, சரஸ்வதி, துரைராசா, அமரர் விமலாதேவி, வரதராசா, யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை காலை 9.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மொந்திப்புலம்.
காரைநகர்.

ந. சுப்பிரமணியம்
(தந்தை)

(சி-28732) (31-18-12)

## சுப்பையா கிருஸ்ணமூர்த்தி

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கிருஸ்ணமூர்த்தி நேற்று (03.07.2003) வியாழக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் காலமானார்.

அன்னார் சுப்பையா (ஓய்வுபெற்ற முகாமையாளர், கைதடி ப.நோ.கூ.ச) காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் அமரர் செல்லையா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் முரளிதரன், ஸ்ரீதரன் (மாணவர்கள், யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஸ்ணசுவாமி (சுவிஸ்), நாகரத்தினம் (கைதடி), கிருஸ்ணகோபால் (சுவிஸ்), நாகேஸ்வரி (கைதடி), கிருஸ்ணபகவான் (கனடா), நாகலக்சுமி (கனடா), கிருஸ்ணதேவன் (கைதடி), நாகபூபதி (கனடா), நாகபுஸ்பம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஜோதி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (கைதடி), ருக்குமணி (சுவிஸ்), கதிர்காமநாதன் (லிகிதர், பநோ.கூ.ச. கைதடி), சிவாநிதி (கனடா), விஜயகுமார் (கொழும்பு), யசோதா (கைதடி), நல்லநாதன் (கனடா), அமரர் செல்வரத்தினம் (ஜேர்மனி) மற்றும் சுப்பிரமணியம், சின்னத்தங்கம், பரமேஸ்வரி, முருகையா, அந்தசாமி (லண்டன்), புவனேஸ்வரி, அண்ணாத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமரர்களான பத்மாவதி, இராசரத்தினம் மற்றும் அன்னராசா, தவமணி, ஜெயசௌரி (லண்டன்), அமரர் நவரத்தினம் மற்றும் வதனி (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை வங்கி ஒழுங்கை.
சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம்.

தந்தை, மனைவி,
பிள்ளைகள்.

(19835) (31-18-13)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் சரஸ்வதி

தாவளை இயற்றாலை, கொடிகாமத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம் சரஸ்வதி 02.07.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சேதுப்பிள்ளை (பாச்சா) தம்பதியினரின் அருமை மகளும், இரத்தினம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் R.V.D.B) அவர்களின் அன்பு மனைவியும், நாகேந்திரன் (ஆசிரியர், யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்) அவர்களின் அருமைத் தாயாரும் சியாமளாவின் அன்பு மாமியாரும், கோதண்யா, விபீசண்யா, நவீன் சங்கர், அருண் சங்கர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.07.2003) வியாழக்கிழமை மாலை 3.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தலவனை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சரஸ்வதி வாசம்',
தாவளை இயற்றாலை,
கொடிகாமம்.

(19837) (31-13-18)

தகவல் :
இ.நாகேந்திரன்
(ரசன்) மகன்.

## கந்தசாமி கமலேஸ்வரன்

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலேஸ்வரன் அவர்கள் 01.07.2003 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் ராஜியின் அன்புக் கணவரும் துவாரகா, துளசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினிதேவி (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (ஜேர்மனி), சந்திராதேவி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவநாதன் (பிரான்ஸ்), ஞானராஜா ஆகியோரின் மைத்துனரும் சிவஷெண், திலக்சன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2003) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல், பத்தமேனி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.

(19836) (29-18-13)

தகவல்
குடும்பத்தினர்.

# மட்டு. ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்றுக் காலை கைக்குண்டுவீச்சு

## மோ.சைக்கிளில் வந்த இருவர் தப்பியோட்டம்

ஆரையம்பதி,ஜூலை4

மட்டக்களப்பு, வண்டிங்ஸ் லேனில் அமைந்திருக்கும் ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நேற்றுக்காலை 6.35 மணியளவில் கைக்குண்டு ஒன்று எறியப்பட்டது. முன்வாசலில் எறியப்பட்ட கைக்குண்டால் அலுவலகம் சிறிது சேதம் அடைந்தது. யாரும் காயம் அடையவில்லை.

அதிரடிப்படை முகாம் வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவரே கைக்குண்டை எறிந்துவிட்டுத் தப்பிச்சென்றனர் எனக் கூறப்பட்டது.

இந்த அலுவலகத்துக்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் பொலீஸாரும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். கடமையில் இருந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போதிலும் மோட்டார் சைக்கிளில் வந்தோர் காயமின்றித் தப்பிவிட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-5-6)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டு - அம்பாறை புலிகளின் பிரதி இராணுவத்தளபதி இராம், அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன், பிரதிப்பொறுப்பாளர் கிருஷன் ஆகியோர் புலிகளின் சார்பில் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பின் சார்பில் ஜோசப் பரராஜசிங்கம், ஜி.கிருஷ்ணபிள்ளை, ஈ.தங்கவடிவேல், ஏ.சந்திரநேரு ஆகியோர் பங்குபற்றினர்.

கல்லடி இராணுவ முகாமைப் பலப்படுத்துவதற்கும் விஸ்தரிப்பதற்கும் இராணுவம் மேற்கொண்டுவரும் முயற்சி குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. கல்லடி முகாம் எந்த ஒரு சூழ்நிலையிலும் நிரந்தர முகாமாக மாங்கள் அனுமதிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர். (ம-5-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.பல்கலைக்கழக இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு இன்று காலை 9மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான சனத்தொகை நிதியத்தின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

'யௌவனப் பராயத்தில் இனப்பெருக்க சுகாதாரக்கல்வி' என்னும் தலைப்பில் இடம்பெறவுள்ள இந்தக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக கலந்து கொள்வார். (எ-12)

## இம்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

அதாவது, அரசாங்கம் புலிகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பரிந்துரைக்கும் வடக்கு - கிழக்கு இடைக் கால நிர்வாகத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் எவரும் மனுத்தாக்கல் செய்ய முடியாத வகையிலான ஏற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது என்று அந்த ஏஜென்ஸித் தகவல் மேலும் தெரிவித்தது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"நாட்டின் வடக்கில் போன்று தெற்கிலும் பாதுகாப்பற்ற நிலைமை தினமும் மோசமடையும் நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் ஒரு பகுதியைப் பொறுப்பேற்க உயர் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வர ஐ.தே.முன்னணி மேற்கொள்ளும் முயற்சி குறித்து செய்தி ஊடகங்களின் மூலம் அறியப்படுகிறது.

உத்தேச சட்ட மூலம் அரசமைப்புச் சட்டத்துக்கு முரண்படுகிறது என்பதைச் சட்ட வல்லுநர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கின்றனர். ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க இதற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட 19ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்துக்கு நேர்ந்த கதியே உத்தேச சட்ட மூலத்துக்கும் நேரும் என்பது அவர்களின் கருத்தாகும்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டுவதற்குப் பதிலாக அவருடன் ஒத்துழைத்துச் செயற்பட்டு, பாதுகாப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதே புத்திசாலித்தனமான காரியமாகும்.

இதுபோன்ற பயனற்ற ஒரு முயற்சியில் காலத்தைச் செலவிடாமல் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பயனுள்ள நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டுமெனக் கோருகின்றேன் - இவ்வாறு அவர் தெரிவித்திருக்கின்றார். (ம-5-6)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரைவழியாக கிளிநொச்சி வந்த கனேடியத் தூதுவர் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு தமிழ்ச்செல்வனைக் கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் சந்தித்தார். சுமார் இருமணிநேரம் அவர்களது கலந்துரையாடல் நீடித்தது.

டோக்கியோவில் நடந்த இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் பங்குபற்றாமைக்கான காரணங்கள் மற்றும் சமகால அரசியல் நிலை தொடர்பாக தமிழ்ச்செல்வன் கனேடியத் தூதருக்கு எடுத்துக் கூறினார்.

"பேச்சுமூலம் நிரந்தரத் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதே எமது தலைமையின் நிலைப்பாடாகும். அதில் மாறுக் கருத்துக்கு இடமில்லை.

"தற்சமயம் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு அரசின் பக்கமே உள்ளது. மக்களின் அவசர மனிதாபிமானப்பணிகளை மேற்கொள்ள இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம். இக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் அரசின் பக்கமே உள்ளது.

"அதிகாரப் பலம் உள்ள சட்ட வலுவான கட்டமைப்பை அரசு உருவாக்கும் பட்சத்தில் நாம் மீண்டும் பேச்சுக்களில் பங்குபற்றுவோம்." - என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பேச்சு மூலம் தீர்வு காணும் விடயத்தில் புலிகள் உறுதியாக இருப்பதையிட்டு மகிழ்ச்சி வெளியிட்ட கனேடியத்தூதுவர், சமாதான முயற்சிகளுக்கு கனடா தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கும் என்றும் கூறினார். அத்துடன் கனேடிய உதவியுடன வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான உதவிகள் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கனேடியத் தூதருடன் தூதரகத்தின் பொருளாதார ஆலோசகர் ஜோ.வில்லியமும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-3)

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடுவதற்காக தமிழ்ச்செல்வன் லண்டன் செல்வார்.

பாலசிங்கம் தற்போது விமானத்தில் பயணம் செய்யக்கூடிய நிலையில் இல்லாததால் தமிழ்ச்செல்வன் லண்டன் செல்லவிருக்கின்றார் என்றும் - புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை,

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக சட்டத்துறை வல்லுநர்களுடன் அரசு தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது என்றும் -

இடைக்கால நிர்வாகம் குறித்த முழுமையான சட்டவரைவை புலிகளுக்கு தற்போது அனுப்பாமல் அந்த வரைவின் மேலோட்டமான விளக்கத்தை மட்டுமே அனுப்ப அரச மட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் - கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது. (ம-3)


எமது நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு
ஜெயம்
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
நிதர்ஷன வீடியோ
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.
T.P.-0777 - 178155 -0777 - 964913

பொருளியற் கல்லூரி
2004 Paper 2003 Class
அலகு ரீதியாக
வணிகக்கல்வி
V. முரளி (B.BA.FM.Spl.)
ஆரம்பம்:05.07.2003
யாழ்ப்பாணம் 11.00 a.m. இணுவில் 5.00 p.m.
(19645)

A/L 2004 நாளை ஆரம்பம்!
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl)
பங்குடமை
முடிவுக் கணக்கு
Sat.,Sun.=> 7-9
ஆரம்பம்:05.07.2003
Sat .=> 7a.m.
விக்னா கல்வி நிறுவனம்
(19844)

A/L 2005 கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl)
தொங்கல்
Sat.,Sun.=> 11-12
ஆரம்பம்:05.07.2003
Sat .=> 11a.m.
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
(19855)

New Science Centre
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்
A/L 2004
"Electricity"
Sat, Sun - 11-12 a.m.
"Paper Class"
உடனடியாக ஆரம்பம்
By- ஜெயரீலன்
"Organic"
பிரிவு I Sat, Sun - 10-11a.m.
பிரிவு II Sat, Sun - 2-3 p.m.
"Physical Chemistry"
Sat, Sun - 12-1
"Paper Class".
Sat, Sun - 7-8 a.m.
By- அன்பழகன்
(19788)

கணக்கீடு
BY: முகுந்தன் B.B.A.(HONS)
A/L 2005
கணக்கீட்டு சமன்பாடு
மூன்று இடத்தில்
ஆரம்பம்: 05.07.2003
சனி, ஞாயிறு
யாழ்.பொருளியற் கல்லூரி
11.00 a.m
இணுவில்
பொருளியற் கல்லூரி
3.00 p.m
BARATHY
(19646) சித்தன்கேணி
2.00 p.m

NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம் A/L 2004
(வேலை, வலு, சக்தி)
சனி, ஞாயிறு 5.00- 6.00 p.m (பழைய நேரம்)
ஆரம்பம்: 05.07.2003
BY.ப.செந்தில்நாதன்
(19838)

உடுவில் மகளிர் கல்லூரி
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு
UDUVIL GIRLS' COLLEGE
EXTERNAL DEGREE UNIT
யாழ். - பேராதனை
G.A.Q., B.A. Part I, B.A.Final, 1st in com., B.Com. Part I., B.Com. Part II, B.Com.Final.
விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அலுவலகத்தில் பெறலாம்.
விரிவுரைகள் ஆரம்பம் 07.07.2003 பிற்பகல் 3.30 மணி.
வகுப்புகள் யாவும் வார நாள்களில் மாலை நேரத்தில் நடைபெறும்.
மேலதிக விவரங்களுக்கு:
இணைப்பாளர்,
பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி.
(30-14-16-17) Phone No. : 021-222-3300
(C/28546)

அறிமுகம்!
HERO HONDA
World No.1
Two-Wheeler Company
SELF START
2 Year Warranty
LEGENDARY MILEAGE
இரத்தினகோபால்ஸ்
RG
63,65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6185 ☎ 0777 340056
(C/28716) (23-13-18-30)




## யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலக இடம்மாற்றம்

02.07.2003ஆம் திகதியில் இருந்து சங்கக் காரியாலயம் இல.188. இராமநாதன் வீதி (யாழ். பல்கலைக்கழகம் முன்பாக) என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது. 05.07.2003 காலை 9.30 மணிக்கு அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் தவறாது காரியாலயத்திற்கு சமுகமளிக்கவும்.

குறிப்பு : வேலையற்ற பட்டதாரிகளிற்கான மீள்பதிவு 13.07.2003 காலை 9 மணிமுதல் 2மணிவரை இடம்பெறும்.

தலைவர்/செயலாளர்,
வேலையற்றபட்டதாரிகள்சங்கம்.
யாழ்.மாவட்டம்.

இல.188, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி. (19808) (31)

## மரண அறிவித்தல்

### கந்தையா கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்)

'அரண்மனை',மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா கனகரத்தினம் அவர்கள் நேற்று (03.07.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவராஜா, யோகராஜா, அருள்ராஜா, சுமங்கலி, ஜனக்குமாரி, முருகானந்தராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக முகவரியான பாடசாலை முன்வீதி, கோண்டாவில் மேற்கில் உள்ள இல்லத்தில் இன்று(04.07.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"மகாதேவ வாசம்",*
*பாடசாலை முன்வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
பேரானந்தமலர் (மனைவி)
த.பாலதயானந்தன் (மைத்துனர்)
(19838) (29)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.